விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(323)

சங்கு 25
ஒலி 264 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை (08.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## காங்கேசன்துறை துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கு இந்தியா 65 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


காங்கேசன்துறை துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கு இந்தியா 65 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதென இலங்கையின் விமான போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் 19

## இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவளித்துள்ள நிலையில் மாவையைச் சந்தித்தார் ரணில்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. 19



# மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்

## யாழில் ஜனாதிபதி ரணில்



- வடக்கில் விவசாயத்துக்கு முன்னுரிமை.
- யாழ்ப்பாண மக்களுக்கு உறுமய காணி உறுதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- காங்கேசன்துறை, பூநகரி, மாங்குளத்தில் விசேட வர்த்தக வலயம்.

(19ஆம் பக்கம் பார்க்க)



## முல்லைத்தீவில் வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்த ஆசிரியர் கைது

(முல்லைத்தீவு)

வாக்குச்சீட்டில் புள்ளடியிட்ட பின்பு அதனை ஒளிப்படம் எடுத்த ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவில் நேற்று கைது செய்யப்பட்டார். 19

## 14 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவை அண்மித்த இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களை நேற்று மாலை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் முன்னெடுத்த சோதனையின்போது, அவர்கள் நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கைது 19



ஜனாதிபதியின் மக்கள் பேரணி உடுப்பிட்டியில் நேற்று இடம்பெற்றபோது...

## தேர்தலில் இடையூறு விளைவித்தால் துப்பாக்கிச் சூடு நடத்துங்கள்

### பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மேலும், வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைது 19

## கண்ணாடித் துண்டு வெட்டியதற்கு உரிய சிகிச்சை பெறாத குடும்பப் பெண் மரணம்

### கொழும்புத்துறையில் சம்பவம்

(கரணவாய்)

கண்ணாடித் துண்டு வெட்டியதற்கு உரிய முறையில் சிகிச்சை பெறாத குடும்பப் பெண் ஒருவர் கிருமித் தொற்று ஏற்பட்டு அதன் காரணமாக மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். 19

## நாவலர் வீதியில் வாள்வெட்டு

### இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் 19

## காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப்பல் சேவை

### தடையின்றி தொடர்ந்து இயங்கும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் - நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தடையின்றி தொடர்ந்து இயங்கும் என கப்பல் சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாரத்தில் செவ்வாய், வியாழன், ஞாயிறுகளில் இயங்கி வரும் கப்பல் சேவை எதிர் வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதியில் இருந்து சனிக்கிழமைகளிலும் இயங்கும். 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 - 09 - 1970

மறைவு 21 - 08 - 2023

தமிழாசிரியர்

## அமரர் ஜீவரஞ்சினி விவேகானந்தராசா

திதி : 2024.09.08

தங்கள் வாழ்வின் இயல்புகளால்
இறைவனின் சாயலை நம்மில்
சிலர் மட்டுமே வாழும் போது வெளிப்படுத்த முடியும்,
ஆனால் அப்படிப்பட்டவர்களில் சிலர்
தெய்வநிலையை அடைந்துவிட, ஏனோ தெரியவில்லை
ஒருபோதும் பின் நிற்பதில்லை,
அந்த இயல்பின் இறைசக்தியும்
ஏனோ தெரியவில்லை - அவர்களை
மனிதர்களில் மனிதர்களாக
இருக்க விரும்புவதில்லை,
"ஜீவா" தெய்வ நிலை அடைவதை
அவரை நேசித்த எவராலும் தடுக்க முடியாது
என்றாகி விட்டபின்பு நாம் வாழும்வரை
அவரை பூஜிப்பதை மட்டுமே
ஆசிக்க கேட்கப்படுகின்றோம்...

அன்னாரின் நினைவேந்தலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

இல.52, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

(C-1140)

குடும்பத்தினர்


# தேவை

தொழில்நுட்பகல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பிப்பதற்கு மூன்று அறை கொண்ட வீடு அல்லது 2500 sq.ft விஸ்தீரணம் கொண்ட இடம் உடன் தேவை.
K.K.S வீதி அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது.
076 897 6665/4 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(320)

# வீடு விற்பனைக்கு

கொக்குவில் ஞானபண்டித பாடசாலைக்கு அருகில் செல்லும் வீதியிலுள்ள மாதா சிலைக்கு அருகில் 2 பரப்பு காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(1884)

தொடர்புகளுக்கு;

076 742 4301
075 710 9639

# தேவை

பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு சுத்திகரிப்பாளர் ஆண் தேவை. அத்துடன் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

(C-1179)

தொடர்புகளுக்கு:

074 056 7791

# புவியியல் (Geography)

A/L (2024) Tamil Medium

மிகக்குறைந்த வகுப்புக் கட்டணத்துடன் துரித மீட்டல் வகுப்பு நிகழ்நிலையில் (Online) ஆரம்பம். 076 055 4530 இல் Whatsapp இலக்கத்திற்கு விபரங்களை அனுப்பிவைக்கவும்.

(317)

ஆசிரியர் :-
V.MENA, BA(HONS), PGDE.


### நெஞ்சுவலியால் பெண் ஒருவர் மரணம்

நெஞ்சுவலி காரணமாக பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

நவாலி வடக்கைச் சேர்ந்த தேவராசா பொன்மலர் (வயது - 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நெஞ்சுவலி காரணமாக குறித்த பெண் அவதியுற்ற நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போதிலும் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

# மரண அறிவித்தல்



## குணலிங்கம் தர்மபூபதி

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பூநகரி முக்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட குணலிங்கம் தர்மபூபதி அவர்கள் 06.09.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சின்னத்துரை குணலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் செந்தில்குமாரி, செந்தில்குமார், வசந்தன், சுமங்கலா ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாபரன், கலைமகள், விஜயகுமாரி, குகதாசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், குயிலினி, கீர்த்தனா, டிலக்சினி, தர்சனா(அமரர்), எழிலன், சிவதர்சன், சபீனா, கபிசன், யதுசன், நிதுசன், பிரகாசினி, கனிஷ்ரன், டிலக்சன் ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும், சிவனேஸ்வரி, சகுந்தலாதேவி, ராஜேஸ்வரி, விக்னேஸ்வரலிங்கம், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், மங்கையற்கரசி, மங்களேஸ்வரி, சுந்தரலிங்கம், கோமளேஸ்வரி, பரமேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08.09.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் முக்கொம்பனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநகரி ஐந்தடிவான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-1139)

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 03 - 1973



மறைவு 13 - 08 - 2024

## வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன்

அல்வாயைப் பிறப்பிடமாகவும் குருபரன் வீதி முழங்காவில், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன் அவர்கள் 13.08.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தீஸ்வரன் - சகுந்தலாதேவி தம்பதிகளின் மூத்த மகனும் ஜெ.கமலவதனி அவர்களின் அன்புக் கணவரும் ஜெ.சத்தியஜித், ஜெ.சாயித், காலஞ்சென்ற ஜெ.தசாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் மணீஸ்வரன் (கனடா) அவர்களின் அன்பு அண்ணாவும் குகனேஸ்வரன், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்பு மருமகனும் ச.தவேந்திரன்(பிரான்ஸ்), மு.பிரசன்னா (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகலனும் வாகினி(பிரான்ஸ்), வினோதினி (கரியாலை நாகபடுவான்), வாசன்(க.நா), வீணாகானி(வவுனியா) ஆகியோரின் அன்பு அத்தானும் மைந்தா(கனடா) அவர்களின் அன்பு மச்சானும் வனிதா(க.நா) வின் அன்புச் சகோதரனும் கம்சி, பானுசன் ஆகியோரின் மாமனும் லதுசன், யாழினி, ஜான்சன், யாழினி, சபினவன், நிஷா, கிஷானி, யதுர்சி, டிலக்சி, விஸ்வர்சினி, விஸ்கர்சினி, ஆரியன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் 09.09.2024 திங்கட்கிழமை (பிரான்ஸ்) நடைபெறும். குருபரன் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குருபரன் வீதி,
முழங்காவில்.


077 078 9922 (தந்தை)
077 712 5402 (மாமனார்)
+164 798 63541 (தம்பி)
+33 6 51 32 67 38 (சகலன்)

(321)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆம் ஆண்டு கண்ணீர் நினைவலைகள்



## அமரர்
# சண்முகநாதன் சந்துதன்

**மலர்வு 07.02.2000 | உதிர்வு 08.09.2009**



அன்புச் செல்வமே சந்து அண்ணா!
நீங்கள் இப்புவியில் வாழ்ந்த காலம் ஒன்பது ஆண்டுகள்
ஆனால் எம்மை விட்டுப் பிரிந்து
பதினைந்து ஆண்டு காலம் ஆகியதோ? ஆனாலும்
உன் மழலைப் பேச்சும் குறும்புத்தனமான உன்
செய்கைகளும் உனது புத்திக் கூர்மையும் எம் மனதில் என்றும்
நிழலாய் தொடர்கின்றதே..
அண்ணா உங்கள் கதைகளை எல்லாம் அம்மா சொல்லக் கேட்டு
உங்களை காணமுடியவில்லையே என ஏங்கித் தவித்தோம்.. நீ
பாவித்த பொருட்கள் ஓடிய சைக்கிள், அணிந்த உடைகள் எல்லாம்
நினைவுச் சின்னமாய் இன்றும் என்றும் உங்களை நினைவுபடுத்திக்
கொண்டே இருக்கும்
நீங்கள் பிரிந்த வேதனையில் அப்பாவும் அம்மாவும்
உங்களிடமே வந்து சேர்ந்துவிட்டனர். உங்கள் மூவரையும்
இழந்து நாம் எல்லோரும் நீங்காத
வேதனையில் தவிக்கின்றோம் என்றும் அது மாறாது
நீங்கள் மூவரும் எப்போ வருவீர்கள் என நீங்கள் துயிலும் இடம்
நாடி சென்று வருகின்றோம் அமைதியான
உறக்கத்தில் மூவரும் உள்ளீர்கள் நாமோ
அமைதியிழந்து தவிக்கின்றோம்.. அண்ணா உங்கள்
ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!*



**4 ஆம் கட்டை,
கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.**

**உங்கள் நினைவில் வாடும்
சகோதரர்கள்- தேவசந்துதன்,
தேவசாத்வீகன் மற்றும் உறவுகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்ரியானோ ரொனால்டோ கால்பந்து உலகில் புதிய சாதனை



கால்பந்து உலகின் சுப்பர் ஸ்ரார் கிறிஸ்டியானோ ரொனால்டோ கால் பந்து உலகில் 900 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார்.

நேஷன்ஸ் லீக். போட்டியில் குரோஷியாவுக்கு எதிராக போர்த்துக் கல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் 34ஆவது நிமிடத்தில் ரொனால்டோ ஒரு கோலை பதிவு செய்ததன் மூலம் கால்பந்து உலகில் 900 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை ரொனால்டோ படைத்துள்ளார்.

இதேவேளை இவ ருக்கு அடுத்த படியாக மெஸ்ஸி 838 கோல் அடித்து 2ஆவது இடத்தில் உள் ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

| அணி | கோல் |
|---|---|
| போர்த்துக்கல் | 131 |
| ஸ்போர்ட்டிங் | 05 |
| ரியல் மட்ரிட் | 450 |
| மான்செஸ்டர் யுனைடெட் | 145 |
| யுவண்டஸ் | 101 |
| அல் நாசர் | 68 |


## வேலையாட்கள் தேவை

- ரொட்டி தயாரிப்பவர்
- சமையல் உதவியாளர்

(வயது - 18 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள்)

தொடர்பு

077 629 0894

(1887)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,
076 097 3127



## வீடு விற்பனைக்கு

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு
அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய
1¾ பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.
◈ விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(1886)

தொடர்புகளுக்கு: 076 116 3919



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கைதடி சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் 4 பரப்புக் காணி நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.


* இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
* உரும்பிராய் சந்தியிலிருந்து ½ Km தூரம்
* வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது.

(1889)

077 288 0152, 077 294 1521


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

08.09.2024



அமரர் சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்

பிறப்பு : 25.11.1944 இறப்பு : 30.08.2014

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறங்கும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பச் சிகரமே...
ஆண்டு பத்து ஆகிவிட்டாலும் இன்றும்
உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழவைக்கின்றது.
உருவாய் எமக்கு வழிகாட்டினீர்கள் அப்பா...
அருவாய் எமக்கு விண்ணிலிருந்து
ஒளியூட்டுங்கள் அப்பா...

(1890)

தகவல்: குடும்பத்தினர்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.08.2024 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்ப ஒளிவிளக்கு

திருமதி
### சின்னத்தம்பி புவனேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.09.2024) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சின்னத்தம்பி வளவு,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

(C-1141)

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எனது நண்பரும் முன்னாள் நல்லூர் பிரதேச சபை
உறுப்பினருமாகிய ஸ்ரீ கனேசா
அவர்களின் அன்புத் தாயார்

அமரர் வல்லிபுரம் சந்திரவதனம்

அவர்களின் இழப்பால் துயரத்தில் இருக்கும் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவையூர் வி.கே.குகானந்தன்
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், நல்லூர்.
தலைவர், ரசிகப்பிரியா சபா
கலைவளர்ச்சி மையம், இணுவில்.

(C-1142)

## கண்ணீர் அஞ்சலி



யா/இணுவில் மத்திய கல்லூரியின் பாடசாலை
அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்
ஆகியவற்றின் முன்னாள் நிர்வாக உறுப்பினரும்
மைதான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான
திரு.இலகுநாதன் (புண்ணியம்)
அவர்களின் துணைவியார்

அமரர் திருமதி
மங்கையற்கரசி இலகுநாதன்

தோற்றம் : 02.07.1947 மறைவு :- 04.09.2024

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திக்குழு,
பழைய மாணவர் சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி

(319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணி வெற்றிடம்-சமையலாளர்

A9 வீதி கிளிநொச்சியில் இயங்கிவரும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு சமையலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
கடமைநேரம் காலை 7.30-மாலை 4.30 மணி
ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (அ-1137)

தொடர்புகளுக்கு:- 076 000 4903




## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் கடைக்கு வேலையாட்கள் தேவை. (அ-1137)
1. விற்பனையாளர் (ஆண்/பெண்)
2. கணணி அறிவுடைய (Auto card) தெரிந்த (ஆண், பெண்)

T.P
021 228 3663, 076 000 4903


## மரண அறிவித்தல்



தோற்றம் 1947 . 07 . 02 | மறைவு 2024 . 09 . 04

அமரர்.

### மங்கையற்கரசி இலகுநாதன்

இணுவில் மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி இலகுநாதன் அவர்கள் கடந்த 04.09.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-தெய்வானைப் பிள்ளை தம்பதியினரது அன்பு மகளும் அமரர்களான செல்லையா-கனகம்மா ஆகியோரது அன்பு மருமகளும் இலகுநாதனின் (புண்ணியம்) பாசமிகு மனைவியும் தமிழ்ச்செல்வன் (கனடா), தமிழரசி (உப அதிபர்-கனு/இல்மா முஸ்லிம் வித்தியாலயம்), தமிழ்ச்செல்வி (சுவிஸ்), தமிழ்வாணி (ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, தமிழரசன் (லண்டன்), தமிழ்வாணன் (தொழில்நுட்ப பீடப் பணியாளர்-யா/நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரிதிலா (கனடா), கருணானந்தன் (Unior Foreman, Built Element ltd, Ratmalane), கதிர்காமநாதன் (சுவிஸ்), குமரதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாகாணக் கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்), ராஜி (லண்டன்), சிவதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், மீனாட்சியம்மா, மற்றும் வைத்தீஸ்வரன் (கனடா), லீலாவதி, புஸ்பராணி (கனடா), நித்தியானந்தம் (கனடா), காலஞ்சென்ற பாக்கியவதி மற்றும் விவேகானந்தன் (ஜேர்மனி), பாலசோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம், சரஸ்வதி , இராஜேஸ்வரி, சிவானந்தம், கமலாதேவி, இராசலிங்கம், செல்வேந்திரம் மற்றும் தர்மலிங்கம் (கனடா), இந்திரலீலா, கந்தசாமி, வரதராணி (ஜேர்மன்), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், இதன், பிரணியா, கருனிஷா, நிவாசனா, தருண், டனுஷன், தவிஷா, ஆராதனி, ஆஹீசன், தஜின், நவீனா, தணிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 08.09.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (1880)

தகவல் : குடும்பத்தினர்.
076 864 0369

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 07 . 1973 | மறைவு 05 . 09 . 2024

அமரர்

### இராஜகுமார் செந்தில்செல்வி


கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் இராஜகுமார் செந்தில்செல்வி கடந்த 05.09.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தவமணி தம்பதியினரின் அன்பு மகளும் இராஜகுமார் அவர்களின் அன்பு மனைவியும், நிரூஜனின் (மகாஜனக் கல்லூரி பழைய மாணவன்) அன்புத் தயாரும், சந்திரகுலசிங்கம், குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம்(ஜேர்மனி), வர்ண குலசிங்கம் (ஜேர்மனி), தவராஜசிங்கம் (நெதர்லாந்து), உதயகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், டெய்சிராணி, செல்வவதனா பொங்கா, மேரிஜடா, கபிலநந்தினி, தாமரைச்செல்வி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 08.09.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தியாகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

076 807 4192
075 786 9999 (c-1138)

தகவல் :
குடும்பத்தினர்.

## 27 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



பிறப்பு 08 - 09 - 1997 | அழிப்பு 17 - 11 - 2020

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன்
(40 ஆம் அணி)

### அமரர். சிதம்பரநாதன் இளங்குன்றன்

வைத்தியக் கனவுடன் மருத்துவபீடம் சென்ற
உன்னை வையத்தில் வாழ்ந்த கொடியோர்
மண்ணுலகை விட்டு விண்ணுலகம்
அனுப்பினர்-நீ மண்ணை விட்டு சென்றாலும்
விண்ணிலும் எம்முடன் இருப்பாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.

தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (C-1136)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் வெற்றிக்காக யாழில் களமிறங்கிய சுசில், டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை வலுப்படுத்தும் நோக்கில் அவருக்கு ஆதரவுகோரி யாழ்ப்பாணத்தில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்டனர். (நி-33)

# ஊழலை ஒழிக்கும் பொற்காலம் கொண்டுவரப்படும்-சஜித்



(கொழும்பு)

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஊழலை ஒழிக்கும் பொற்காலம் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி வேட்பாளரும், கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் புதிய தொழில்நுட்பத்தினூடாகவே நடைபெறுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக தேவைப்பாடுடைய பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மற்றும் கதீஜா ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இதற்கான நிதிப்பங்களிப்பினை இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

## மானியப்பதிவும் காலபோகக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற் குழி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கான மானியப்பதிவு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் 2 மணிவரை கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

விவசாயிகள் பதிவு செய்ய வரும் போது ஆள் அடையாள அட்டை, வங்கிப்புத்தகம், 2024 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிப்பற்றுச்சீட்டு, சந்தாப்பணப் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் வருகை தரவும். கால போகத்திற்கான கூட்டம் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் எனக் கைதடி நாவற்குழி கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (நி)


## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வீடு தேவை. (இ)

தொடர்புகளுக்கு
077 358 0935

யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியாவிலும்.....

IELTS Academic / General Training

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

IELTS LIFE SKILLS A1 UK Qualification (318)

Spoken Diploma in English

ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு Spouse, Work, Student விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

DEUTSCH

பிரான்ஸ் மொழிப் பாடநெறி FRENCH நெதர்லாந்து மொழி பாடநெறி DUTCH

BRITISH COLLEGE of Education

More information 0777-695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200 Vavuniya. Tel : 024 - 4930041
Kilinochchi. Tel : 021-4927114 Puthukkudiyiruppu. Tel : 01173-01173
Trincomalee. Tel : 011- 4809245 Mullaithivu. Tel : 021- 7284344

IDP - IELTS, IELTS UKVI பரீட்சை நிலையம்.

## மணமகள் தேவை

1991. இந்து. திருவோணம். DOCTOR
பூர்வீகம்-யாழ்ப்பாணம். வதிபுமிடம்-CANADA
மணமகன் பதிவு இல: 10770
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (359)

## மணமகள் தேவை

1977. இந்து. விசாகம். TEACHER,
பூர்வீகம்-யாழ்ப்பாணம். வதிபுமிடம்-யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல: 10883
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (359)

## மணமகன் தேவை

1992. இந்து. மிருகசீரிடம். DOCTOR,
பூர்வீகம்-நெல்லியடி. வதிபுமிடம்-நெல்லியடி
மணமகள் பதிவு இல: 10531.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401 (359)

## மணமகன் தேவை

1997. இந்து. சித்திரை. MANAGER,
பூர்வீகம்-கோப்பாய். வதிபுமிடம்-GERMANY
மணமகள் பதிவு இல: 10981.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை மட்டுமே
அழையுங்கள் 076 664 9401 (359)

# மணிவிழாவும் சேவை நயப்பும்

உயர்திரு. வல்லிபுரம் நவலோகநாதன்
(பதில் அதிபர், கல்விமாணி, பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)





சேவை விபரம்

- யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம் (17.08.1988-27.02.1991)
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை (28.02.1991-31.02.1993)
- யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம் (01.03.1993-31.07.1996)
- யா/பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் (01.08.1996-31.05.1997)
- யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் (01.06.1997-31.01.2004)
- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி (01.02.2004-31.12.2014)
- யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் (10.01.2015-14.01.2022)
- யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் (15.01.2022-இன்றுவரை)

வாழ்த்துவோர்:- அதிபர்,ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் (c-1135)

# சேவை நலன் பாராட்டு வாழ்த்துக்கள்



திருமதி. நிறைமதி தெய்வீகலிங்கம்
(விஞ்ஞான பாட ஆசிரியர்)

எமது பாடசாலையில் 06.09.2024 வரை விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றி 07.09.2024 இலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியரை, இதுவரை தாங்கள் பாடசாலைக்கு ஆற்றிய சேவைக்காக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன் தங்களின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வு அடைகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம் யா/இணுவில் [illegible] (1858)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







உரையாசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் திருக்குறள் நூல் வெளியீட்டு விழா நேற்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்றது.பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

(படங்கள்- மதுபோட்டோ,நல்லூர்)

# அநுரவை ஆதரித்து வவுனியாவில் பிரசாரம்

(வவுனியா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்கவை ஆதரித்து வவுனியா நகரில் தொழிற் சங்கங்களின் பங்கேற்புடன் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, குடியிருப்பு பகுதியில் நேற்றுக் காலை ஆரம்பமாகிய பிரச்சார நட வடிக்கை நகர வர்த்தக நிலையங்கள், மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கள், மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

(நி-250)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 458



# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் மிகச் சிறப்பாக நிறைவேறி இருக்குது.

எந்தவிதமான நெருக்கடிகளும் இல்லாமல் முருகன்ர பெருந்திருவிழா மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றிருப்பது ஆத்ம திருப்தியைத் தருகிறது.

**விதானையார்:-** பண்டிதர் ஐயா சொல்லுறது நூறு வீதம் உண்மை.நல்லூர் முருகன்ர மகோற்சவம் மிகவும் உன்னதமாக நடைபெற்றதால ஒரு பெரும் மனத்திருப்தியும் மன மகிழ்ச்சியும் அனைவரிடமும் ஏற்பட்டுள்ளதென்பதைக் கூறித்தானாக வேணும்.

**கங்காணி:-** அதோட இம்முறை கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தங்கட பணியைச் சிறப்பாகச் செய்திருக்கினம்.

அதிலும் குறிப்பாக, வாகனங்களை ஒழுங்கு படுத்துறதில பொலிசாரின்ர பணி உச்சம் எனலாம்.

**சாத்திரியார்:-** கங்காணியார் சொன்னாப் போலத்தான் ஞாபகம் வருகுது. இந்த முறை நல்லூர் இந்து விடுதி, இருக்கிற வீதியில கடைகள் போடுவதற்கு யாழ்ப்பாண மாநகரசபை அனுமதி கொடுக்கவில்லை.

அதால அந்த வீதியில சன நெருக்கடி இல்லாமல் போயிற்றுது.

கடந்த வருடம் (2023) அந்தப் பகுதியில இருந்த நெருக்கடி தொடர்பில வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம்; யாழ்.இந்து விடுதி (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை) இருக்கிற வீதியில் கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கக் கூடாது எண்டு எழுதியிருந்தது.அந்த விடயம் இந்த முறை அமுலாக்கப்பட்டிருப்பதால நெருக்கடி இருக்கவில்லை.

அதுபோல இந்த முறை ஒரு விடயத்தை நாங்கள் சுட்டிக்காட்ட வேணும். இவ்வாறு சாத்திரியார் கூறியதும் என்ன சாத்திரியார் சொல்லுறியள். மூப்பர் அவசரப்பட்டார்.

**சாத்திரியார்:-** பாரதி சிலையில இருந்து வடக்குப் பக்கமாகச் செல்கிற சிவன் புது வீதியை ஒரு வழிப்பாதையாக மாற்ற வேணும்.

இந்த முறை அந்த வீதியின்ர இரு பக்கத்தாலும் வாகனங்கள் வந்ததால, அந்த வீதிகளில கடும் நெருக்கடி ஏற்பட்டது.

அதை விட, சிவன் புது வீதியின்ர இருமருங்கிலும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்கள் நிறுத்தப்பட்டதாலும் அந்த வீதியில நெருக்கடி ஏற்பட்டு அடியவர்கள் மிகுந்த அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர்.

ஆகையால சிவன் புது வீதியை ஒரு வழிப்பாதையாக அமைக்க வேணும்.


என்னைப் பொறுத்த வரை ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்கள் வெளியேறக் கூடிய வகையில் சிவன் புதுவீதி ஒரு வழிப் பாதையாக இருக்க வேணும்.

**பண்டிதர்:-** சாத்திரியார் சொல்லுறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது.

அதேநேரம் நல்லூர் முருகனின்ர மகோற்சவ காலத்தில, சிவன் புது வீதியை ஒரு வழிப்பாதையாக மாற்றுவது தொடர்பில் அப் பகுதி மக்களை அழைத்து அவர்களுக்கு விளக்கம் கொடுத்து அதை அமுலாக்குவதை யாழ்.மாநகர சபை செய்ய வேணும்.

என்னைப் பொறுத்த வரையில நாங்கள் எந்தப் பொது வேலையைச் செய்வதாக இருந்தாலும் அதில இருக்கிற நியாயங்களைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்த வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை தாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வது போல ஆலடியில் இருந்தவர்கள் தலையசைக்க ஆலடி மௌனமாகியது.



## நல்லூர் மஹோற்சவத்தின் போது சிவன்புதுவீதியை ஒருவழியாக்குக!

மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** அது சரி தபால் மூல வாக்களிப்பு எப்படி இருந்ததாம்.

**கங்காணி:-** இஞ்சே சிறாப்பர். தபால் மூல வாக்களிப்பில பங்கு பற்றினவர்கள் சொன்ன ஒரே விடயம் வாக்குச் சீட்டில இருக்கிற சின்னங்கள் சிறிதாக இருந்ததால அதை இனங் கண்டு கொள்வது கடினமாக இருந்ததெண்டு.

அதேநேரம் எப்படி வாக்களிக்கிறதென்பதிலும் அரச உத்தியோகத்தர்களிட்ட தெளிவின்மை இருந்ததைக் காணமுடிந்தது.

**விதானையார்:-** ஓ! இப்ப நாங்கள் எதிலும் அசமந்தம் தானே.

அதால தான் நாடு இந்தளவு தூரம் படுபாதாளத்தில வீழ்ந்து கிடக்குது.

உண்மையில வாக்களிப்புத் தொடர்பில வாக்காளர்கள் மிகவும் தெளிவாக இருக்க வேணும். ஏனோ தானோ எண்டு வாக்களித்தால், ஏனோ தானோ எண்டு நாட்டை நிர்வகிக்கக் கூடியவர் தான் ஆட்சியில அமருகிற துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டு விடும்.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மைதான். சரியாக வாக்களிக்கிற முறையை முதலில் அரச உத்தியோகத்தர்கள் அறிஞ்சு வைச்சிருக்க வேணும்.

அவர்கள் தான் சாதாரண மக்களுக்கும் வாக்களிக்கிற முறையைச் சொல்லிக் குடுக்க வேணும்.

இதைவிட்டிட்டு எப்படி வாக்களிக்கிறது எண்டு தெரியாமல் அரச உத்தியோகத்தர்கள் இருந்தால், எல்லாம் அம்போ தான்.

**சாத்திரியார்:-** தெரியாமத் தான் கேட்கிறன் ஜனாதிபதித் தேர்தலில யார் வெல்லுவினம் எண்டு நினைக்கிறியள்.

**விதானையார்:-** இஞ்சே சாத்திரியார் எதுக்கும் செப்ரெம்பர் 22 ஆம் திகதிவரை அமைதியாக இருங்க, அதுக்குப் பிறகு யார் ஜனாதிபதி என்பது தெரியவரும்.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



57 ஆவது ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை எதிர்கொள்ள வுள்ள பிரச்சினைகள் என்ன?






மீண்டும் அடிதடிக் கலாசாரம் தலை தூக்க முற்பட்டு விட்டதே வியாசரே?

**சுதன் — குப்பிளான்**

**13 ஆவது திருத்தச்சட்ட மூலம் இனியாவது நடைமுறைக்கு வருமா வியாசரே?**

மேற்கே சூரியன் உதிக்கும் என்று கனவு காணலாமே தவிர அது ஒரு நாளும் நிஜத்தில் நடந்து விடாது.
இது போலத்தான் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை எமக்கான முழுமையான தீர்வாக எடுத்துக் கொள்ளவில்லை தமிழ் மக்கள். அப்படிப்பட்ட தீர்வைக்கூடத் தமிழி னத்திற்கு தரத் தயாராகவில்லை சிங்கள தேசம்.
நிலை இப்படி இருக்கும் போது 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் நாம் நம்பிக் கொண்டிருப்பது ஒரு போதும் தீர்வைத் தராது.
தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத 13ஐ தமிழீழத்திற்கு ஒப்பானதாய் ஒப்பிடு கிறார்கள் தெற்கு அரசியல்வாதிகள்.
இப்படிப்பட்ட புரிந்துணர்வு இருக்கும் போது 13 எப்படி மலரும்.

**இளங்கோ — மானிப்பாய்**

**இலங்கை ஆட்சியாளர்களுடன் ஒன்று சேர்ந்து இருந்தவர்கள் இப்போது யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள் வியாசரே?**

தன் இனம், தனக்கு வாக்களித்த இனத் தவர், தன் உறவுக்காரர், தன் உரிமைக் காரர், தன் உற்றார், தன் நண்பர்கள் இவர்களை ஏமாற்றுபவர்கள் மனிதனாக இருக்க மாட்டார்கள்.
ஆனால் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கோடி கோடியாய் பணம் வாங்கி கைகட்டி தலை குனிந்து நின்றவர்கள் எல்லாம் தமிழ் தேசியம் பேசுகிறவர்கள் என்று நினைக்கும் போது அடடா இப்படிப்பட்ட ஈன இனத்தில் பிறந்து விட்டோம் என்று வெட்கமாக இருக்கும்.
வெட்கப்பட்டு என்ன பயன் வந்து விடப்போகிறது. தன்னை நம்பி வாக்களித்த வர்களை உதறி எறிந்து விட்டு கோடிக ளுக் காக பிறர் காலடியில் கிடப்பவர்களுக்கு அடுத்த தேர்தலிலாவது பாடம் கற்பிக்க வேண் டும்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**மதுவன் — மீசாலை**

**நல்லதைப் பாராட்டும் எண்ணம் எம்மிடம் இல்லாது போய்விட்டதே வியாசரே?**

உண்மை தான். தவறை தூக்கிப் பிடிக்கும் எமக்கு நல்லதைப் பாராட்டத் தெரியாது போனது வேத னையே.
அண்மையில் கோப்பாய் அம்மாச்சி உணவ கத்திற்குச் சென்றிருந்தேன். உணவின் தரம், சுவை, விலை என்பன மிக உன்னதமாக இருந்தது.
வீட்டில் அம்மாவின் கையினால் உணவு உண்டு மகிழ்ந்த திருப்தி.
1பூரி, 1 கடலை வடை, 2 தோசை, 1 சோடி பால் அப்பம், 1 பிளேன்ரி வெறும் 250 ரூபாய். மனமும் வயிறும் நிறைந்தது. அன்னையர்க்கு அன்பு நிறை வாழ்த்துக்கள்.

**மதுவன் — மீசாலை**

**இன்றைய இளையவர்கள் அதிகாலை 12 மணிக்கு வீதிகளில் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடுகிறார்களே?**

உன் நண்பனைப் பற்றிச் சொல். நான் உன்னைப் பற்றிச் சொல்லுகிறேன் என்றொரு அருமையான வாசகம் உண்டு.
ஒருவன் சமூகத்தில் எப்படி வரப்போகிறான் என்பதை அவனின் நட்பு வட்டமே தீர்மானிக்கும்.
ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்கள் தமிழ் இனத் திற்காக தம் உயிரை துச்சமாக மதித்து களமாடி மடிந்தார்கள்.
அவர்களின் மடிவு புதிய எழுச்சியை ஏற்படுத் தியது. அந்த எழுச்சி 2009 முள்ளி வாய்க்கா லுடன் முற்றுப் பெற்றுவிட தற்போதைய இளம் தலைமுறை முடியை சடை வளர்த்து வாயில் பாக்கு போட்டு மோட்டார் சைக்கிளை முறுக்கி ஓடி சந்தியில் சண்டித்தனம் காட்டி...
இப்படிப்பட்டவர்களிடம் எப்படி தாய்ப்பற்று இருக் கும்? தாய்மண் பற்று இருக்கும்? தமிழ்ப்பற்று இருக்கும்? இனப்பற்று இருக்கும்? எல்லாம் முடிந்து 15 வருடங்கள் கடந்து விட்டன.

**விஜயதரன் — உரும்பிராய்**

**57 ஆவது ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை எதிர்கொள்ள வுள்ள பிரச்சினைகள் என்ன?**

தவறு செய்த ஒருவன் நான் தவறு செய்யவில்லை என்று தலைநிமிர்ந்து நின்ற இடமென்றால் அது ஐ.நா சபை மட்டுமே.
தமிழினத்தை கொத்துக் கொத்தாய் அழித்ததற்குத் தகுந்த ஆதாரங்கள், சாட்சியங்கள் இருக்கின்றன.
இல்லை அது பொய். இதை நம்பாதீர்கள். நாங்கள் யோக்கியர்கள் என்று எதிர்வாதம் புரியும் அதிகாரிகளின் பேச்சை உன்னிப்பாக கவனிக்கிறது ஐ.நா.
இப்படி நிலை இருந்தால் எப்படி பாதிக்கப்பட்ட இனத்துக்கு நீதி கிடைக்கும். இப்படி நிலை இருந்தால் இன்னொரு முறை இப்படி செய்வதற்கு யோசிக்க மாட்டார்கள் தானே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**மீண்டும் அடிதடிக் கலாசாரம் தலைதூக்க முற்பட்டு விட்டதே வியாசரே?**

சினிமா எம் இளைய தலைமுறையை சீரழித்து விட்டது என்று கூறுவதே உண்மையானது.
ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் பண்பாடு, கலாசாரத்தைச் சிதைத்தாலே போதும். அந்த இனம் தானாக அழிந்து விடும்.
இப்போது நடப்பதும் இதுவே. வீதியில் தறுதலையாய்த் திரியும் இளைஞர்களை மறித்து எமது வீர வரலாறு தொடர்பில் கேட்டுப் பாருங்கள். அப்படி இங்கே நடந்ததா? என்று கேட்பார்கள்.
இவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் தல, தளபதி. இப்படிப்பட்ட இளைஞர்கள் தான் எமது இனத்தின் எதிர்காலத் தூண்கள் என்று நினைக்கும் போது வெட்கித் தலைகுனிய வேண்டியுள் ளது. ஏனென்றால் இதற்கு நாங்களும் ஒரு காரணமாகி விட்டோமே என்று.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**அன்பின் வியாசரே தமிழ் தேசியப் பறவைகள் ஏழைத் தமிழ் மக்களின் வீடுகளைத் தேடி வராதது ஏன்?**

இப்படி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்களே ஈஸ்வரன்.
உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்.
ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தமிழ்த் தேசியப் பறவைகள் உங்கள் வீடுகளுக்கு வந்து அம்மா! அம்மா! ஓட்டுப் பிச்சைப் போடுங்கோ. நாங்கள் உங்கட கஷ்டங்களைத் தீர்ப்பம் என்று கெஞ்சவில்லையா? ஒரு வேளை நீங்கள் வீட்டில் இல்லையென்றால் பதினைந்து இருபது நோட்டீசை உங்கள் படலைக்குள் செருகிவிட்டுச் சென்றதில்லையா?
உங்கள் ஊரில் தேர்தல் கூட்டம் வைத்து தமிழ் தேசிய வீர வசனங்கள் பேசவில்லையா?
இப்படி பொய் பேசாதீர்கள். இப்போது கூட ஜனாதிபதித் தேர்தல் முடிய அடுத்து பாராளுமன்றத் தேர்தல் நடக்கும். அப்போதும் உங்கள் வீடுகளுக்கும் அவர்கள் வருவார்கள். வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பது உங்கள் கைகளிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி அ

# அருள்மிகு குருக்கட்டு அ

# மஹா கும்பாபிஷேக



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி.

சிவநேயச்செல்வர்காள்!

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நவகுண்ட பட்ஷ மஹா கும்பாபிசேகம் இடம் பெறுவது நாம் செய்த பெரும் தவப்பேறாகும்.

மஹாகும்பாபிஷேகம் எனும் திருக்குட முழுக்கைக் காண்பது இப் பிறவியின் பெரும் பயன் எனலாம்.


பிரணவப் பொருளாகிய விநாயகப் பெருமான் நம் முன்னை வினை தீர்க்க வல்லவன். அவனை நாள்தொறும் தொழுவார்க்கு எந்தத் தீங்கும் இல்லை.

அல்வாய் வடக்கில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் குருக்கட்டு அரசடி விநாயகப்பெருமான் மீது அடியவர்கள் கொண்ட பேரன்பால், மஹா கும்பாபிஷேகம் இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

ஆலய புனரமைப்புப் பணிகளையும் மஹாகும்பாபிசேகத் தையும் செய்து முடிப்பதென்பது சாதாரண விடயமல்ல.

அப்பெரும் கைங்கரியத்தை மிகச் சிறப்பாகச் செய்துள்ள ஆலய பரிபாலன சபையினருக்கும் விநாயகன் மீது அளவு கடந்த அன்பு கொண்ட மீளா அடியவர்களுக்கும் எமது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற விநாயகனின் அருள் வேண்டி ஆசி வழங்குகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.ஆதீன குரு முதல்வர்,நல்லை ஆதீனம்.



### வேலன் சுவாமிகளின் ஆசியுரை

பருத்தித்துறை அல்வாய் வடக்கு குருக் கட்டு அரசடி எனும் திவ்யப்பதியிலே கோவில் கொண்டு வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபி ஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயங்கள் புனரமைக்கப் பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெறுவதால் ஊரும் மக்களும் புனிதமடைகின்றனர்.

அந்த வகையில் அல்வாய்ப் பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் தன்னைத் தொழும் அடியவர்களின் உடல். உள ஆரோக்கியத்தையும் ஆன்மீக வளர்ச்சியையும் பேணி மகிழ்வுடன் வாழவைப்பார் என்பதில் ஐயமில்லை. தூலலிங்கமான இராஜகோபுரம் அடியவர்கள் எத்திசையிருந்து பார்த்தாலும் தெரியக்கூடியதாகவும் இறைவனை குறிப்பிடுவதாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில் அமைந்துள்ள சதுர்துவார இராஜ கோபுரங்கள் சிறப்புமிக்கவை.

மஹா கும்பாபிஷேகம் நடைபெற ஆசி வேண்டி எல்லாம் வல்ல அருள்மிகு குருக்கட்டு ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். வெள்ளிக்கிழமை தோறும் ஆலயங்களில் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை என்பன நடைபெறுவதுடன், விசேட பூசைகள் இடம்பெற்று பிரசாதம் வழங்கப்பட வேண்டும்.

சிறுவயதிலிருந்து குழந்தைகளுக்கு அறநெறியையும், சைவப்பண் பாட்டையும், இந்து கலாசாரத்தையும் வளர்ப்போமாக இருந்தால் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். எனவே இப்பணியை, ஆலயங்களும் பெற்றோரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும்.

தவத்திரு வேலன் சுவாமிகள்,
ஆதீனமுதல்வர்,சிவகுரு ஆதீனம்,நல்லூர்



### செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சுமார் 300 வருடங்களுக்கு முன்னர் எமது முன்னோர்களால் நிர்மாணிக்கப்பட்ட எமது ஆலயமானது 100 வருடங்களுக்கு முன்னர் மடாலயமாக விளங்கிய போது திருவெம்பாவை 10 நாட்களும் திருவிழாக்கள் மற்றும் சூர சங்காரங்கள் சமுத்திர தீர்த்தம் என்னும் பல சிறப்பம்சங்கள் பொருந்திய விழாக்கள் நடை பெற்றன.

ஆரம்ப காலத்தில் கொட்டில் மற்றும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்ட எமது ஆலயமானது 1988 ஆம் ஆண்டு வைரக்கற்களால் கட்டப்பட்டு ஆகம விதிப்படி மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தற்போது இம் மூன்றாவது கும்பாபிஷேக திருப்பணி வேலைகளின் போது நாற் திசையும் வான் உயர்ந்த கோபுரங்கள், விமானங்கள், மணிக்கோபுரங்கள், மணி மண்டபங்கள், வில் மண்டபங்கள், சிற்ப அலங்காரங்கள் என பல்வேறு பரிமாணங்களில் ஆலயம் அமைந் துள்ளமை மகிழ்ச்சி தருவதோடு இப் பெருவிழாவினை வாழ்த்தி வணாங் குகின்றேன்

க.கோவிந்தன், செயலாளர்.



ஆலய முகப்பு இராஜ கோபுரம்



ஆலய தெற்கு வாசல் இராஜ கோபுரம்



### ஆலய பிரதம குருவின் ஆசியுரை

குருக்கட்டு அரசடி விநாயகரின் ஜீனோர்தான அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சதுர்துவார நூதன ராஜாகோபுர சப்தயாக மஹா கும்பாபிஷேக நிகழ்விற்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ் வடைகின்றேன்.வடமராட்சி அல்வாய் வடக்கு பகுதியில் குடிகொண்டு வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் விநாயகரின் கும்பாபிஷேக நன்றாளில் அவன் தாள் வணாங்கி எம் பிணி தீர்க்க வேண்டினால் அவன் அதை செய்து முடிப்பான்.

ஆலயத்தின் நான்கு பக்கமும் இராஜகோபுரம் அமையப் பெற்றிருப்பது விசேட அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படும் நிலையில் நாம் அனைவரும் கும்பாபிஷேக நிகழ்வில் ஆசார சீலர்களாய் கலந்து கொண்டு விநாயகன் தாள் சரணடைந்தால் அவன் எமக்கு அருளை அள்ளி வழங்குவான் என்பதைக் கூறி இக் கும்பாபிஷேக நாள் சிறப்புற அமை வாழ்த்தி வணங்குகின்றேன்.

பிரம்மஸ்ரீ உலக.புஷ்பராஜக் குருக்கள்,
பிரதம குரு, குருக்கட்டு,அரசடி விநாயகர் ஆலயம்.



### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

மனிதனை மனித நேயத்துடன் வாழ வழிசமைப்பது ஆலய வழிபாடாகும். ஆலயம் மனிதனுடைய பூரணமான ஆன்மிக வளர்ச்சிக்கு நிறைவான பணியைச் செய்கின்றது

உலகில் நாம் உய்வதற்காகப் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச்செய்து வழிபடுதலே கும்பாபிஷேகம் எனப்படும். தெய்வ சாந்தியத்தை அதிகரிக்கச் செய்து மூர்த்தி கரத்தை கூட்டுகின்ற மேன்மையான கும்பாபிஷேகத்தை தரிசிப்பவர்கள் அனைவருக்கும் அரசடி விநாயகப்பெருமானுடைய அருள் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். அழகுறும் ஆலயமும் இக்கும்பாபிஷேக நிகழ்வும் விநாயகப்பெருமானின் அருளை எடுத்துச் சொல்வதாகவும் மக்களது மனங்களில் புத்துணர்வையும், புது நம்பிக்கையையும் பிறக்கச்செய்வதாகவும் வலுவூட்டுகின்றதாகவும் அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.பழமையும். பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தில் வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்து மக்களை காத்தருளிவரும் அரசடி விநாயகப்பெருமான் எழுந்தருளி அருளாட்சி புரிகிறார். இங்கு நடைபெறும் மஹாகும்பாபிஷேகம் ஊருக்கும் மக்களுக்கும் சிறப்பையும் மேன்மையையும் தர அரசடி விநாயகப்பெருமான் அருள்பாலிக்க வேண்டிநிற்கின்றேன்.

சி.சத்தியசீலன்,பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.



### பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடியில் அமர்ந்து நாடி வருபவர்களுக்கு எல்லாம் கேட்ட வரம் அளிக்கும் விநாயக பெருமான் சுமார் 300 வருடத்திற்கு மேலான கால தொன்மையினை கொண்டவர். மடாலயமாக இருந்த காலத்தில் திருவிழாக்கள் விரதங்கள் சிறப்பாக நடைபெற்றது. 100 வருடங்களுக்கு மேலாக தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இன்று ஆலயம் புதுப் பொலிவு பெற்று நாற்திசையும் கோபுரங்களுடன் காட்சி தருவது சிறப்பாக உள்ளது.

இன்றைய நாள் நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் மூலம் எம் ஊர் சிறக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

க.காண்டீபன்,பொருளாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்வாய் வடக்கு
# அரசடி விநாயகர் ஆலயம்
## ...ஷக சிறப்பு மலர்- 08.09.2024


ஆலய மேற்கு வாசல் இராஜ கோபுரம்


ஆலய வடக்கு வாசல் இராஜ கோபுரம்

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி



"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்கு. அந்த வகையில யாழ்ப்பாணம் பருத்தித் துறை அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி என்னும் புண்ணிய பகுதியிலே கோவில் கொண்டு வீற்றிருக்கும் அகிலலோக நாயகன் ஸ்ரீ சித்தி விநாயக பெருமானுக்கு கடந்த 05 வருடங்களாக திருப்பணி வேலைகள் நடைபெற்று சதுரத்துவார இராஜ கோபுரங்களோடு(நான்கு வாசல்) அமைக்கப்பட்ட ஆலயத்தை பார்த்து மகிழ்வடைவதில் எம் பெருமானுடைய மஹா கும்பாபிஷேகம் இனிதே சிறப்புற நடைபெற்று ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுடைய நல்லருளை அனைவரும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ எம் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக் களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கும்பாபிஷேக பிரதம குரு**
**ஆகமகிரியா பாவனம் சிவஸ்ரீ நாராயண சண்முக நாதகுருக்கள்**
**வவுனியா கோவில் குள சிவன் ஆலய பிரதம குரு.**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



அத்திமுகவனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு முக்தி பெறுவரே.

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் குறித்து ஆனந்தமடைகின்றேன். ஆலயத்தை அழகுற புதுப்பித்து மஹா கும்பாபிஷேகம் செய்விக்கும் அறங்காவலர்களுக்கும் அடியவர்களுக்கும் ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.சைவ மக்களின் வாழ்வில் விநாயகர் வழிபாடு மகத்துவமானது. எளிமையாக வீற்றிருந்து தன்னை நாடி வருபவர்களை உய்விக்கும் தெய்வம். அந்தவகையில் முன்னோர்களால் தோற்றுவிக்கப்பட்ட இவ் ஆலயத்தை தம் குலதெய்வமாகக் கொண்டு அனுதினமும் வழிபாடு செய்யும் பக்தர்கள் காலத்திற்கு காலம் திருப்பணிகள் செய்து ஆலயத்தை வளப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது.

கற்றோரும் கலைஞர்களும் நிறைந்த பதியில் ஆத்மீகம் தழைத்தோங்குவது இயல்பு. அல்வாய் திருவூர் அருள்வளம் நிறைந்த பூமி இத் திருவூரில் செயற்கரும் காரியங்கள் சிந்திப்பதற்கு விநாயகர் என்றும் துணை நிற்பார் என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்,**
**தலைவர், தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**

### பரம்பரை பிரதம குருவின் ஆசியுரை




யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடியில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சதுர் துவார இராஜகோபுரங்களுக்கும் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது.

எமது பூட்டனார் காலத்தில் இருந்து பரம்பரை பரம்பரையாக நித்திய நைமித்திய கிரியைகளை ஆற்றி வந்துள்ளோம். வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை அளிக்கும் எமது குல தெய்வமாக விளங்கும் குருக்கட்டு அரசடி விநாயகப் பெருமானுக்கு அழகிய தூபிகள் சிற்ப அலங்கார வேலைகள் நான்கு வாசல்களிலும் இராஜ கோபுரங்கள் என்பன எல்லாம் அமையப் பெற்று இன்று மஹா கும்பாபிஷேகம் காணுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதோடு இக் குடமுழுக்கு விழா சிறப்பாக அமைய வாழ்த்துவதோடு நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குக.வாமதேவசர்மா,கனடா.**

### ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தின் நித்திலமாய் இலங்கைத் திருநாட்டில் நான்மறைகளும் தமிழ் வேதங்களும் சைவமும் தமிழும் ஓங்கி விளங்கும் யாழ்ப்பாண மாநகரிலே பருத்தித்துறை அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி எனும் திவ்விய பதியிலே கோவில் கொண்டு அருள்பொழியும் விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா இன்றைய தினம் சிறப்புற நடைபெறுகின்றது.

எம்பெருமான் அல்வாய் வடக்கு குருக்கட்டுப்பதியிலே 17 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் எமது முன்னோர்களால் தோற்றுவிக்கப்பட்டு பிற்காலத்தில் எமது மூதாதையர் தல விருட்சம் என சிறப்பிக்கப்படுகின்ற மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்பம்சங்களைக் கருத்திற் கொண்டு தெவுளியானை எனும் பதியிலே பிரதிஷ்டை செய்தனர்.எமது முன்னோர் இராஜவிருட்சம் என இந்து சமயத்தவரால் போற்றப்படுகின்ற அரச மரத்தின் மகிமையை அறிந்தவராய் எமது ஆலயத்தின் தல விருட்சமாய் அரச மரத்தையே கொண்டிருந்தனர். ஏனெனில் அரச மரத்தின் வேர்ப் பகுதியில் பிரம்மாவும் நடுப்பகுதியில் திருமாலும் மேல்ப்பகுதியில் (உச்சி) ஈசனும் இருந்து அருள் பாலிப்பதாக புராணங்கள் இயம்புகின்றன.

17 ஆம் நூற்றாண்டில் மடாலயமாக இருந்த காலத்திலிருந்தே எமது ஆலயத்தில் பிள்ளையார் கதை, கந்தஷஷ்டி சூரன் போர் ஆகிய விரதங்கள் சிறப்பாக இடம்பெற்றிருந்ததுடன் திருவெம்பாவை விரத காலப் பகுதி திருவிழா போன்று நடைபெற்று இறுதித் தினங்களில் தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தத்திருவிழா போன்றவை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருந்தன. 19 ஆம் நூற்றாண்டிலே எமது ஆலயத்திற்கென எமது மூதாதையர்கள் நாதஸ்வரம் மற்றும் நட்டுவ மேளம் ஆகிய இசைப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

1930 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் எம் பெருமானின் சிறப்புக்களை போற்றி எமது முன்னோர்களால் எமது ஆலயத்திற்கென திருவூஞ்சல் பாடல் பாடப்பட்டது. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட எம்பெருமான் இன்று நாற்றிசைகளும் கோபுரங்களுடன் கூடி மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவைக் காணுகின்றார்.

**பேரம்பலம் வரோதயம்,**
**பரிபாலன சபைத் தலைவர்,**
**குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலயம்.**

### ஆலய காப்பாளர் சபையின் வாழ்த்துச் செய்தி

ஈழவளத்திருநாட்டின் வடபுலத்தின் சிகரமெனத்திகழும் வடமராட்சி பிரதேசத்தில் ஆன்மிகமும் சைவாசாரமும் தழைத்தோங்கும் கிராமம் அல்வாய் வடக்கு பிரதேசமாகும். அக்கிராமத்தின் கண் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு மேலான தொன்மையும் பழமையும் கொண்டது குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலயமாகும். இவ்வாலயம் இன்று மூன்றாவது மஹா கும்பாபிஷேகத்தை காண்பது எமக்கு பேருவகை தருகின்ற தருணமாகும்.

எமது ஆலயம் ஆதியில் மடாலயமாக இருந்து பல படி நிலைகளைத்தாண்டி வளர்ச்சி கண்டு இன்று ஆகம விதிகளுக்கு அமைவாக சகல அம்சங்களுடனும் புதுப்பொலிவுடனும் திகழ்வது எமக்கு மிகுந்த பெருமை தருகின்றது. நாற்றிசையும் எழில் மிகு இராஜகோபுரங்களும் இரு நிலை மணிக்கோபுரங்களும் அழகுற திருநிலைப்படுத்திய பரிவார மூர்த்திகளும் விதிமுறைகளுக்கு அமைவான மண்டபங்கள் சகிதம் நிர்மாணிக்கப்பட்டு வெளிநிலையில் ஆலயத்தின் செயற்பாடுகளோடு இணைவு பெற்ற கல்யாண மண்டபமும் அமையப்பெற்று சிறப்புற காட்சி தருகின்றது.எம்பெருமானின் அருட்கடாட்சத்தினால் எமது புலம் பெயர் உறவுகள் மற்றும் உள்நாட்டில் வாழும் உறவுகளின் பெரும் நிதிப்பங்களிப்பில் இக் கைங்கரியம் நிறைவேறியுள்ளது.

அத்துடன் எமது ஆலயத்தின் அங்கத்தவர்கள் பரிபாலன சபையினரின் மனிதவலுச் செயற்பாட்டின் அர்ப்பணிப்பான சேவையினை வளங்கியமையும் இதன் உயர்வுக்கு முக்கிய காரணங்களாக நிற்கின்றன. எனவே அனைத்து வளங்களுடனும் முழு நிறைவு கண்டிருக்கும் எமது ஆலயம் மஹா கும்பாபிசேகத்தைக் காணும் இத் தருணத்தில் நாட்டுக்கு மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களையும் விநாயகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டுவதுடன் மேற்படி கும்பாபிஷேகமும் அதன் தொடர் நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற எம்பெருமானின் பாதார விந்தங்களை அடிபணிந்து வாழ்த்தி நிற்கின்றோம்.

**காப்பாளர் சபை உறுப்பினர்கள்.**
**நல்லையா சிவதாஸ், முருகேசு அனாதரட்சகன்,**
**சுப்பிரமணியம் மகேஸ்வரன், மயில்வாகனம் மகேந்திரம்,**
**இராசையா குகதாஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் போற்றும் ஈழத்துக் கலைஞர்கள்

**ஈழத்தின் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட (சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள் மூவர் "சிலோன் ராப்" என்ற இசைக்குழுவை உருவாக்கி பல ராப் பாடல்களை வெளியிட்டு வந்த நிலையில்) ஒரு ராப் பாடல் அவர்கள் வாழ்வை மாற்றவல்லதாய் மாறியது. இன்று இந்தியாவில் நேரமின்றி நிகழ்வுகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஜூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வி இங்கு அப்படியே பிரசுரமாகிறது.**



'ஜினுக்கு சிங்காரி' ராப் பாடல் தான் சமீபத்திய சோஷியல் மீடியா ட்ரெண்டிங். 'மருதமோ எந்தன் காவியமோ' எனத் தமிழ் வார்த்தைகளை எடுத்துக் கோர்த்து 2கே கிட்ஸ்களில் ஆரம்பித்து 80ஸ் கிட்ஸ்கள் வரை ஆட்டம்போட வைத்திருக்கிறது அந்தப் பாடல். பாடலைப் பாடிய வாகீசன் ராசையா, திஷோன் விஜய மோகன், அட்விக் உதயகுமார், டி.ஜே.சிவாஜி என்ற 'ராப் சிலோன்' ரீமைச் சந்தித்தோம்.

கடந்த ஓகஸ்ட் முதல் வாரத்தில் கொழும்பில் நடந்த கான்செர்ட்ல தான் தமிழ் நாட்டைச் சேர்ந்த டி.ஜே.சிவாஜி அண்ணனைச் சந்தித்தேன். ரொம்ப நட்பாக பழகி னார். ஒரே ஹோட்டலில்தான் அறை ஒதுக்கியிருந்தார்கள். ரூம்ல உட்கார்ந்து தூக்கம் வராம காஷுவலா பாடின பாட்டுதான் 'ஜினுக்கு சிங்காரி.' இந்த அளவுக்கு வைரலாகி ட்ரெண்டாகும் என்று நினைத்துக்கூட பார்க்க வில்லை. இயக்குநர் அமீர் சேர் நேரில் கூப்பிட்டுப் பாட வைத்துப் பாராட்டினதோடு, அவர் படத்தில் இரண்டு பாடல்கள் பாட வாய்ப்பு கொடுக்கிறதாகவும் சொல்லியிருக்கிறார்!" உற்சாகத்துள்ளலோடு பேசும் வாகீசன் ராசையாவிடம், "தமிழ் மீதும் இசை மீதும் ஆர்வம் வந்தது எப்படி?" என்று கேட்டோம்.

"பிறந்து வளர்ந்தது எல்லாமே யாழ்ப்பாணம்தான். என்னுடைய அம்மா துஷ்யந்தினி, ஆசிரியர். தமிழ்மீது அதிக ஆர்வம் கொண்டவர். நிறைய தமிழ்ப் பாடல்களும் எழுதியிருக்கிறார். எனக்கும், அண்ணன் உமாகரன், அக்கா சாகித்யகருமாரி மூன்று பேருக்குமே அம்மா சின்ன வயதிலிருந்தே தமிழை ஊட்டி வளர்த்தார் என்று தான் சொல்லவேண்டும்.

திருக்குறள், 63 நாயன்மார்கள், திருப்புகழ், தேவாரம், மூதுரை, நன்னெறி என்று அம்மாதான் அறிமுகப்படுத்தினார். சங்க இலக்கிய நூல்கள் எல்லாமே எனக்கு அத்துப்படி. அண்ணன் உமாகரனும் புத்தகங்கள் எழுதியிருக்கிறார். நான் ராப் பாடுவேன்னு கண்டுபிடிச்சதே அண்ணன்தான். 'நீ கடகட என்று பேசுறதே ராப் பாடுவது மாதிரி இருக்கிறது என்று சொல்லிப் பாட வைத்ததே அவர்தான்.

அதன் பின்பு தான் ராப் பாடல்கள் பாடுவதில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் பாடல்கள என்றால் உயிர். பாடலாசிரியர்களில் எனக்கு இன்ஸ்பிரேஷன்னா கண்ணதாசன் ஐயா தான். அவருடைய வரிகள் எளிமையாவும் மக்களின் வாழ்வியலோடு கலந்தும் இருக்கும்.

நண்பர்கள் அட்விக், திஷோன் மூன்று பேருமே யாழ்ப்பாணம்தான். கலைத்துறையில சாதிக்க வேண்டும் என்பது தான் எங்களின் ஆசை. 2020 ஆம் ஆண்டு 'ராப் சிலோன் என்ற இசைக்குழுவை உருவாக்கினோம். ஆரம்பத்தில் டிக்டாக், இன்ஸ்டா, பேஸ்புக் போன்றவற்றில் நிறைய பாடல்கள் பாடி வீடியோ போட்டோம். 'தமிழில் ராப் பாடுறீங்களா. மக்களிடம் போய்ச்சேராது என்று சொன்னார்கள். ஆனால், பொசிட்டிவ் கமெண்ட்களை மட்டுமே எடுத்துக் கொண்டேன்.

எனது அப்பா அருள்பரன் கடுமையான உழைப்பாளி. அதிக வருடமாக ரீக்கடையில வேலை பார்க்கிறார். நீ தொடர்ந்து முயற்சி செய். படிப்பையும் விடாதே. என்று ஊக்கப்படுத்தினார். நான் எப்பவும் வகுப்பில் முதல் மார்க்தான். எனக்கு வயது 24. பயோமெடிக்கல் டிகிரி முடிச்சிருக்கேன். அடுத்ததாக, மாஸ்டர் டிகிரி முடிச்த்து விட்டு ரிசேர்ச் பண்ணணும் என்கிற ஐடியாவும் இருக்கிறது.

அப்பாவுடைய கனவை நிறைவேற்றிவிட்டு எனக்கு விருப்பப்பட்ட இசைத்துறையிலும் சாதிப்பேன். இலங்கையில் சமீபத்தில் நடந்த சந்தோஷ் நாராயணன், யுவன் கான்செர்ட்ல நாங்க பாடியிருக்கிறோம். அடுத்ததாக, விஜய் ஆண்டனி சேரோட கான்செர்ட்டிலும் பாடப் போகிறோம்.

நான், அட்விக், திஷோன் மூன்று பேரும் தமிழ்நாட்டில் இந்த அளவுக்குப் பேசப்படுவதற்குக் காரணமே டி.ஜே. சிவாஜி அண்ணா தான். அவர், புதிய பாடல்களுக்கேற்ற பழைய டான்ஸ்களையும் பழைய டான்ஸ்களுக்கேற்ற புதிய பாடல்களையும் மிக்ஸ் செய்து நிறைய வீடியோக்கள் போட்டு தமிழ் நாட்டுல் ஏற்கெனவே ரொம்ப ஃபேமஸ். இப்போது வைரலான 'மருதமோ எந்தன் காவியமோ" பாட்டுக்கு மியூசிக் மிக்ஸிங் செய்தார். நாங்கள் நாலு பேருமே சேர்ந்து மிட்நைட் கான்செர்ட் செய்யலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

வாகீசனுடன் பாடி வைரலான அட்விக், "எனக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆர்வம். இப்போது யாழ் சினிமாவான "ராட்சச ராமன்" படத்துல நடித்திருக்கிறேன். வாகீசன் மாதிரி நண்பன் கிடைத்தால் வாழ்க்கையில் ஜெயித்துக் கொண்டே இருக்கலாம்..!" என்கிறார் எனேர்ஜியோடு.

வாகீசனின் "ராப் சிலோன்" குழுவின் இசையமைப்பாளர் திஷோன், "எங்கள் மூன்று பேருக்கும் ஒரு ஒற்றுமை என்ன என்றால் மூன்று பேருடைய அம்மாக்களும் டீச்சர்கள் தான். எங்களுக்குள்ளே இருக்கிற அலைவரிசை இப்போது குடும்பம் வரை தொடர்கிறது.

படம் பார்க்கக்கூட அனுமதித்தது கிடையாது. சேர்ச்சிலும் பக்கத்து வீட்டு அண்ணாவிடமும் கீபோர்ட் கற்றுக் கொண்டதைப் பார்த்து என்னை வீட்டில் புரிந்து கொண்டார்கள்.

வீட்டில் பெரிதாக வருமானம் கிடையாது. பார்ட் டைமா ஹோட்டல்ல வேலை பார்த்துக் கொண்டுதான் படித்தேன். லோன் போட்டு நாலு வருசமா கஷ்டப்பட்டு ஒரு சின்ன ஸ்டூடியோ கட்டினேன். அந்தப் பத்துக்குப் பதினைந்து ரூம்ல தான் எங்க ரீமுடன் பாட்டுகளை கம்போர்ஸ் பண்ணுகிறோம். ஏ.ஆர்.ரஹ்மான் சேர் மாதிரி மிகப்பெரிய இசையமைப்பாளர் ஆக வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு!" என்கிறார் நம்பிக்கையோடு.

"தமிழ் இலக்கியம், தமிழ் மரபு, ஈழத்தமிழர்கள் பற்றி என் பாடல்கள் மூலமாக தமிழ் மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும் என்று விரும்புறேன். அதனால்தான், பாடுவது மட்டுமல்லாமல் எழுதவும் செய்கிறேன். பெரும்பாலும் தமிழ் வார்த்தைகளையே பயன்படுத்துகிறேன். அதற்கான, அங்கீகாரமாகத்தான் பாராட்டுகள். யுகபாரதி ஐயா நேரில் கூப்பிட்டு என்னைப் பாராட்டியது ஊக்கமாக இருந்தது. உலகம் முழுக்க கான்செர்ட் நடத்தி தமிழைக் கொண்டு போய்ச் சேர்க்கணும் என்பது தான் என்னுடைய கனவு. அதேபோல நான் ராவணனுடைய மிகப் பெரிய பக்தன்.

முப்பாட்டன் இராவணன் மட்டு மல்லாமல் இராவணன் தங்கை சூர்ப்பனகை பற்றியும் பாடுகிறேன்.

சூர்ப்பனகையுடைய அழகை கம்பர் அப்படி வர்ணித்து சொல்லியிருக்கிறார். அதை யாரும் கண்டு கொள்ளவில்லை. அதைத் தான் பாட்டாக பாடியிருக்கின்றேன். இனியும் பாடுவேன் என்கிறார் வாகீசன் பெருமிதத்தோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பாபு
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்



இதோ என்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
இதோ என்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
பாசமுள்ள பார்வையிலே கட்வுள் வாழ்கிறான் அவன்
கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்
பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான் அவன்
கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான் இசைப்
பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்
அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான் இசைப்
பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான் குளிர்
மேகமென தாகத்தையே தணிப்பான் தளிர்க்
கொடி விளையும் கனிகளிலே இனிப்பான் குளிர்
மேகமென தாகத்தையே தணிப்பான் தளிர்க்
கொடி விளையும் கனிகளிலே இனிப்பான்

பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான் அவன்
கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்
இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே •

பல நூல் படித்து நீ அறியும் கல்வி பொது
நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம் இவை
அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம் இவை
அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

தன் வியர்வையிலும் உழைப்பினிலும் வாழ்வை
கண்டு தொழில் புரிந்து உயிர் வளர்க்கும் ஏழை
அவன் இதழ் மலரும் சிரிப்பொலியைக் கேட்டேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்

பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான் அவன்
கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்
இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான்
ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

ஆஆஆஆஆஆஆஆ ஓஓஓஓஓஓஓஓஓ

# வானில் ஒரு வானவேடிக்கை!

செப்ரெம்பர் மாதத்திற்குள் எந்தநேரத்திலும் வானில் ஒரு நட்சத்திரம் வெடிக்கும். இதைக் கேட்டதுமே பதை பதைக்கிறது தானே?

இருக்காதா... நம் தலையில் தானே வந்துவிழும் என்கிற பதற்றம் யாருக்குமே இருக்கும் தான். ஆனால், இந்த வெடிப்பு அப்படி பயப்படும் அளவுக்கு இருக்காது என்றே கணிக்கின்றனர் அறிவியலாளர்கள். அதுமட்டுமல்ல. இது, 80 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழக்கூடிய அபூர்வ வான வேடிக்கை. இந்தத் தடவை தவறவிட்டால், நம் வாழ்நாளில் மீண்டும் ஒரு தடவை இதைப் பார்ப்பதென்பது மிகமிக அரிது என்கிற அளவுக்கு பில்டப் கொடுக்கிறார்கள்.

இத்தகைய நட்சத்திர வெடிப்பு என்பது இந்த அண்டத்தில் சாதாரண நிகழ்வே. ஆனால், வெடிக்கவிருக்கும் நட்சத்திரத்தின் அளவை வைத்துத்தான் பாதிப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று கணிப்பார்கள். சிறிய நட்சத்திரம் வெடித்தால், அதை நோவா என்று அழைக்கிறார்கள். இதுவே, பெரிய நட்சத்திரம் வெடித்தால். சூப்பர் நோவா! பெரும்பாலும் நோவா எனும் சிறிய நட்சத்திர வெடிப்புகளின் போது பாதிப்பு பெரிதாக இருக்காது என்பதே அறிவியலாளர்களின் கணிப்பு!

கொரோனே போரிலிஸ் என்பது, ஒரு நட்சத்திரக் கூட்டம். அதில், டி கொரோனே போரிலிஸ் என்ற சுடர்விடும் ஒரு நட்சத்திரமும் உள்ளது. இதனை, சுருக்கமாக "டி சிஆர் பி" என்பர். இதை, 'மரணப்படுக்கையில் இருக்கும் நட்சத்திரம்' எனலாம். காரணம், இந்த நட்சத்திரம் தன்னிடம் உள்ள அனைத்து ஹைட்ரஜன் அணுக்களையும் எரித்துத் தின்று தீர்த்துவிட்டது. தொடர்ந்து, ஹீலியம் போன்ற பிற அணுக்களைப் பிணைத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், இதன் உருவம் மிகப்பெரியதாக உள்ளது. எனவே, இதனை சிவப்பு ராட்சஷன் என அழைக்கின்றனர். இந்தச் சிவப்பு ராட்சஷன் அருகே, வெள்ளைக் குள்ளன் என்ற ஒரு நட்சத்திரம் உள் ளது. இது, தன்னிடம் இருந்த எரிபொருள்களை எல்லாம் எரித்து முடித்து விட்ட ஒரு நட்சத்திரம். இதனை 'இறந்த நட்சத்திரம்' என அழைப்பதுண்டு.

பெயரளவில்தான் குள்ளன். ஆனால், சிவப்பு ராட்சஷனை விட அதிக நிறையும் வலிமையும் கொண்டது. இந்தக் குள்ளனின் ஈர்ப்பு எல்லைக்குள், சிவப்பு ராட்சஷன் சிக்கியுள்ளது. எனவே, இது வெள்ளைக்குள்ளனை ஏறக்குறைய ஒரு வட்டப் பாதையில் சுற்றி வருகிறது. 80 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த இரண்டு நட்சத்திரங்களும் மிக அருகே வருகின்றன. அப்போது, வெள்ளைக் குள்ளன், சிவப்பு ராட்சஷனின் வாயுக்களை தன்பால் ஈர்க்கிறது. அந்த வாயு, வெள்ளைக் குள்ளனின் மேற்பரப்புக்கு வந்தடைகிறது. இது, அங்குள்ள அதீத ஈர்ப்பு சக்தியால் அழுத்தப்படுகிறது. அதனால், வெப்பம் அதிகரிக்கிறது. இறுதியில், இது ஓர் அற்புதமான, மிகப் பெரிய அணுகுண்டு வெடிப்பை நிகழ்த்துகிறது. அந்த நோவா நட்சத்திர வெடிப்பைத்தான் செப்ரெம்பர் மாதத்துக்குள் நாம் பார்க்கவிருக்கிறோம்.

இதுவரை பலமுறை இந்த இரண்டு நட்சத்திரங்களும் அருகருகே வந்தபோது இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இந்தச் சிவப்பு ராட்சஷன் நட்சத்திரம், 1886 ஆம் ஆண்டும், 1946 ஆம் ஆண்டும் வெடித்துச் சிதறியுள்ளது. அந்த வகையில், வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் இந்த நட்சத்திரம் மீண்டும் வெடித்துச் சிதறப் போகிறது.

நட்சத்திரம் வெடிக்கும் தருணத்தில் மட்டுமே நம்மால் பார்க்க முடியும் என்றில்லை. இந்த வெடிப்பை ஒரு வார காலத்திற்கு வெறும் கண்ணால் காணலாம். வடக்குக் கீழ்வானத்தில் விடிவெள்ளி போலக் காட்சி தரும் இந்த நட்சத்திரம் சுமார் 3,000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. அதாவது, நாம் ஒளியின் வேகத்தில் பயணித்தால் இந்த நட்சத்திரத்தை 3,000 ஆண்டுகளில் அடையலாம்.

உயிர்கள் உருவாகத் தேவையான கார்பன், நைட்ரஜன் மற்றும் ஒக்சிஜன் போன்ற கனிமங்கள், நோவா எனும் இத்தகைய வெடிப்பின் போதுதான் உருவாகின்றன. இந்த சூரியக் குடும்பமே இது போன்றதொரு "நோவா" வின்போதுதான் தோன்றியது. அதை வைத்துதான், இதுமாதிரியான "நோவா" நிகழ்வை தீவிரமாக ஆராய்ச்சி செய்யும் ஆர்வம் இங்கே அதிகமாக இருக்கிறது. இந்த ஆராய்ச்சி, உயிரிகள் எவ்வாறு தோன்றின என்பதை அறிந்துகொள்ளப் பெருமளவில் உதவும். எனவே, வரும் செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் இந்த "நோவா" வை எதிர்நோக்கிபல துறையைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

"சூப்பர்நோவா" நிகழ்வின் போது நிறைய புது அணுக்கள் பிறக்கின்றன. இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து பல சேர்மங்களை உருவாக்குகின்றன. இந்தச் சேர்மங்கள், எண்ணற்ற விண்கற்களையும், ஆயிரக்கணக்கான கோள்களையும் பல நட்சத்திரங்களையும் உருவாக்குகின்றன.

இப்படிஒரு சூப்பர்நோவா, 50 ஒளியாண்டு தொலைவில் நடந்தால் பூமியில் வாழும் உயிரினங்கள் பெருமளவில் அழிந்துவிடும். காரணம், இந்தப் பெரும் வெடிப்பின்போது காமா கதிர்கள் மற்றும் எக்ஸ் கதிர்கள் அதிக அளவில் நம் பூமிக்கு வந்து சேரும். அதனால் ஓசோன் படலம் மிகவும் மோசமாகச் சேதமடையும். இதன் காரணமாக அதிக அளவு தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர் வீச்சுகளும், பிற அபாயகரமான கதிர்வீச்சுகளும் பூமியின் மேற்பரப்புக்கு வந்தடையும். பூமியின் மேற்பரப்பில் வாழும் உயிரினங்கள் பெருமளவில் செத்து மடியும்.

இப்போதைக்குக் கண்கள் தயாராக இருக்கட்டும்... நோவாவைக் காண!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

415

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உங்களுக்கு கால் வீக்கம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?...



கணுக்கால் வீக்கம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? இந்த வீக்கம் இருப்பவர்களுக்கு என்ன நோய் நிலைமைகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது?... எவ்வாறு அவர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பது? இதற்கான தீர்வுகள் என்ன? என்பவை பற்றிப் பார்ப்போம்.

உங்களுக்கு கணுக்கால் வீக்கம் இருக்கிறதா இல்லையா என அறிந்து கொள்வதற்கு நீங்கள் உங்களுடைய பெருவிரலை உங்கள் கணுக்காலின் உட்பக்கமாக வைத்து, 2-3 செக்கன்கள் இறுக்கமாக அழுத்திப் பிடித்து விட்டு, கையை எடுக்கும் போது, அவ்விடத்தில் பள்ளம் போன்று சில வினாடிகளுக்கு இருக்கும் எனில், உங்களுக்கு கணுக்கால் வீக்கம் இருக்கிறது என தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு இரண்டு பக்க கால்களிலும் செய்து பார்க்க வேண்டும். இரண்டு கால்களிலும் கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு சில நோய்கள் இருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். ஒரு பக்கம் மட்டும் கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு வேறு சில நோய் நிலைமைகள் இருக்கக்கூடும். சிலருக்கு இந்த கால் வீக்கம் சாதாரணமானதாக கூட இருக்கலாம். உதாரணமாக, நீண்ட தூரம் பிரயாணம் செய்பவர்களுக்கு கால் வீக்கம் ஏற்படலாம். பின்னர் ஓய்வெடுத்த உடன் வீக்கம் சரியாகிவிடும். இவ்வாறு இருந்தால் அது குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இந்த கணுக்கால் வீக்கம் தொடர்ந்து இரண்டு கால்களிலும் இருக்குமானால் பல்வேறு நோய்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. ஆகையால், இது குறித்து கவனம் எடுக்க வேண்டும்.

முதலாவதாக, இதய நோய்கள் இருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அதிலும் முக்கியமாக, வலப்பக்க இதயம் தொழிற்படுவது குறைவாக இருக்கலாம். உதாரணமாக, மாரடைப்பு வந்தவர்கள் மற்றும் இதய வால்வு பிரச்சனை உள்ளவர்களுக்கு கணுக்கால் வீக்கம் வருவதற்குரிய சந்தர்ப்பம் இருக்கிறது.

அவர்களுக்கு, படியேறும் போது களைப்பு ஏற்படல், அடிக்கடி மார்பு வலி ஏற்படல், நித்திரையில் மூச்சுத் திணறல் ஏற்படல் போன்றவை காணப்படும். இவ்வாறானவர்களுக்கு ஏற்கனவே இதய நோய்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். இரண்டாவதாக, ஈரல் சம்பந்தமான பிரச்சினை உள்ளவர்களுக்கும் இந்த கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரை, அதிக குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு இந்த ஈரல் சம்பந்தமான பிரச்சனை அதிகமாக காணப்படுகின்றது. அவர்களுக்கு இரண்டு பக்க கால்களிலும் வீக்கம் இருக்கக்கூடும். இவ்வாறானவர்களுக்கு கால் வீக்கத்துடன் வயிறு வீக்கமும் இருக்கலாம். அது தவிர சிலருக்கு இரத்த வாந்தி ஏற்படலாம், மலம் கறுப்பாக காணப்படலாம். இவ்வாறான அறிகுறிகளுடன், அதிக குடிப்பழக்கம் உள்ள ஒருவர் வந்தால், அவருக்கு ஈரல் பழுதடைந்திருக்க முடியும்.

மூன்றாவதாக, சிறுநீரகப் பிரச்சனை உள்ளவர்களுக்கும் இரண்டு கணுக் கால்களும் வீங்கி காணப்படலாம். அது தவிர சிறுநீரகத் தொழிற்பாடு குறைந்தவர்கள், உதாரணமாக நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கும் கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிக மாகும். இவ்வாறானவர்களுக்கு, உணவில் நாட்டமற்ற தன்மை, வாந்தி, குமட்டல் தன்மை, கண்ணைச் சூழ வீக்கத் தன்மை போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

அடுத்ததாக, சிலருக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் கூட, அவர்கள் எடுக்கின்ற சில மருந்துகளால் கணுக்கால் வீக்கம் ஏற்படக்கூடும். பிரதானமாக, Amlodipine எனப்படும் உயர் குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கும் மாத்திரையை 5 Mg ஐ விட அதிகமாக எடுத்தால், கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அப்படி ஏற்பட்டால், அந்த மருந்து எடுப்பதை நிறுத்தும் போது கால் வீக்கம் படிப்படியாக குறையும். இது தவிர, உடலில் புரதக் குறைபாடு உள்ளவர்களுக்கும் கால் வீக்கம் வரலாம். முதலில் கூறியது போல், சிறுநீரகப் பிரச்சனை உள்ளவர்களுக்கு சிறுநீரில் புரதம் வெளியேறுவதாலும், மலத்துடன் புரதம் வெளி யேறுவதாலும், பிற நோய்கள் காரணமாக புரதம் வெளியேறுவதாலும், உடலில் புரத அளவு குறைந்து, கால் வீக்கம் ஏற்படலாம். இவை தான், இர ண்டு பக்க கால்களும் வீங்கும் போது நாம் கருத்திற் கொள்ள வேண்டிய நோய் நிலைமைகள் ஆகும்.

இது தவிர ஒரு பக்கம் மட்டும் கால் வீக்கம் காணப்படுவது பிரதானமாக காலில் கிருமித் தொற்றின் காரணமாக இருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் காலின் தோல் சிவப்பு நிறத்தில் காணப்படலாம். தோல் மினுமினுப்பு தன்மையுடையதாக இருக்கலாம் தொடும் போது அவ்விடத்தில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படலாம் அல்லது புண் இருக்கலாம். இவ்வாறான நிலை உள்ளவர்களுக்கு, அவற்றிற்கு சிகிச்சையளிக்கும் போது, கணுக்கால் வீக்கம் குறைவடை யும்.

இது தவிர, கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான பிரதானமான காரணமாக கால்களில் ஏற்படும் இரத்தக் கட்டிகள் அமைகின்றன. இதனால் ஒரு பக்க கால் வீக்கம் ஏற்படலாம். இது பிரதானமாக, நீண்ட தூரப்பிரயாணம், தூர தேச விமானப் பிரயாணம் செய்பவர்களில் அதிகமாக ஏற்படும். இவர்களுக்கு எந்தவொரு பிற அறிகுறிகளும் இல்லாமல் சிறிதளவு வலியுடன் கூடிய கால் வீக்கம் மட்டும் காணப்படும். இது தவிர அரிதாக, யானைக்கால் நோயும் கால் வீக்கத்தை ஏற்படுத்தும். இது முன்பு குறிப்பிட்ட நோய்களில் இருந்து சற்று வித்தியாசமானது. இந்நோய் உள்ளவர்களில் காலின் தோல் மரத்து காணப்படும், கை விரலால் அழுத்தும் போது அமராமல் காணப்படும். இவ்வாறான நிலையில் அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பது அவசியம்.

அடுத்ததாக கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு என்னென்ன பரிசோதனைகள் செய்யலாம்... எவ்வாறு மருத்துவ சிகிச்சை செய்யலாம் என பார்ப்போம். இவர்களுக்கு பிரதானமாக, சில இரத்த பரிசோதனை செய்ய வேண்டி இருக்கும். அவற்றில் முக்கியமாக ஈரல் சம்பந்தமான பரிசோதனைகள், சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனைகள், உடலில் உள்ள புரதத்தின் அளவு சம்பந்தமான பரிசோதனைகள் மற்றும் சிலசமயங்களில் தைரொய்ட் சம்பந்தமான பரிசோதனைகளும் செய்ய வேண்டி இருக்கும். இது தவிர, சிறுநீரில் சில பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். உதாரணமாக, UFR பரிசோதனை செய்து, சிறுநீரில் புரதம் வெளியேறுமாக இருந்தால் பிற மேலதிக பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். அதோடு முன்னரே குறிப்பிட்டது போல, இதய நோய்களும் கணுக்கால் வீக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால், இதயம் சம்பந்தமான பரிசோதனைகளான ECG, ECHO போன்ற பரிசோதனைகளை செய்ய வேண்டி இருக்கும். இது தவிர, ஈரல், சிறுநீரகம் சம்பந்தமான மேலதிக பரிசோதனைகளுக்காக Ultra sound scan எனப்படும் பரிசோதனை செய்து வயிற்றுப் பகுதியை scan செய்து பார்க்க வேண்டி ஏற்படும். இவ்வாறான பரிசோதனைகள் செய்வதன்மூலம் அவர்களுக்கு எவ்வகையான நோய் நிலைமைகள் உள்ளன என அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.


ஒற்றைக் கணுக்கால் வீக்கம் வரும்போது, இரத்தக் கட்டிகள் உள்ளதா என்று பார்க்க காலில் Venous duplex scan எனப்படும் scan ஐ செய்து பார்க்க வேண்டி ஏற்படும். இது தவிர, யானைக் கால் நோய்க்கான பரிசோதனைகள், Cellulitis எனப்படும் கிருமித் தொற்றின் அளவைப் பார்ப்பதற்காக சில பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். இவற்றை செய்து, எந்த நோய் நிலைமை காரணமாக இந்த கணுக்கால் வீக்கம் ஏற்பட் டுள்ளது என அறியலாம்.

இறுதியாக இவர்களுக்கு எவ்வாறான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் செய்யலாம் என சுருக்கமாகப் பார்ப்போம். பொதுவாக, இதயம், சிறுநீரகம், ஈரல் நோய்கள் காரணமாக இரண்டு கால்களிலும் வீக்கம் காணப்படுபவர்கள், உணவில் உப்பை குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு உள்ளெடுக்கும் நீரின் அளவு குறைவாக இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு 1.5 லீற்றர் நீர் அருந்துவதே இவர்களுக்கு போதுமானதாக இருக்கும். உடம்பில் இருந்து நீரினை வெளியகற்ற Diuretics எனப்படும் மருந்து வகை இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது தவிர நீங்கள் சாதாரணமாக இருக்கும் போது காலை கீழே விடாமல், ஒரு கதிரைக்கு மேல் வைத்திருப்பதன் மூலம் கால் வீக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும். ஆனால், கால் வீக்கத்திற்கு மட்டும் சிகிச்சை செய்தால் காணாது. நம் பொய்யா மொழிப் புலவர் கூறியது போல " நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் " என்பதற்கு இணங்க நோயை மட்டும் தீர்ப்பதற்கு மருத்துவம் செய்யாமல் அந்த நோய் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கும் மருத்துவ சிகிச்சை செய்வதன் மூலம் இந்த நிலை மீண்டும் எற்படாமல் தடுக்க முடியும். அதே போல் இந்த கணுக்கால் வீக்கத்திற்கும் அது ஏற்படக் காரணமான நோய்களுக்கும் சேர்த்து மருத்துவம் செய்து கணுக்கால் வீக்கம் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

Dr. R. கஜந்தன்,
பொது வைத்தியநிபுணர்,
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ‘கால்வைத்தவர்கள் உயிருடன் திரும்பியதில்லை’

# சென்டினல் தீவு-ஒரு திக்திக் பயணம்

வடக்கு சென்டினல் தீவு அந்தமான் தீவுகளில் ஒன்றாகும். இது வங்காள விரிகுடாவில் உள்ள ஒரு இந்தியத் தீவுக் கூட்டமாகும். இதில் தெற்கு சென்டினல் தீவும் அடங்கும். வடக்கு சென்டினல் தீவில் தனிமைப்படுத்தப்பட்ட பழங்குடியினரான சென்டினலீஸ்கள் வெளி உலகோடு தொடர்பில்லாமல் வாழ்கின்றனர். இங்கே யாரும் செல்லக் கூடாது என்று இந்திய அரசு பாதுகாத்து வருகிறது.

அந்தமான் தீவுக் கூட்டங்களில் ஒன்றான தனிமைப்படுத்தப்பட்ட வடக்கு சென்டினல் தீவுக்குச் சட்டவிரோதமாகச் சென்ற அமெரிக்கச் சுற்றுலாப் பயணி ஒருவர் 2018 இல்மரணமடைந்தார். இந்த மரணம் இந்தச் சிறிய தீவில் வாழும் தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் மீது உலகின் கவனத்தை ஈர்த்தது.

பூமியில் நாகரீக உலகோடு தொடர்பில்லாமல் வாழும் பழங்குடி மக்களில் வடக்கு சென்டினல் குழுவும் ஒன்று. இந்த தொடர்பின்மைக்கு புவியியல் காரணங்களும் உண்டு. இந்த சிறிய தீவு முக்கியமான கப்பல் வழித்தடங்களுக்கு அப்பால் உள்ளது. மேலும் ஆழமற்ற பாறைகளால் சூழப்பட்டுள்ளது. அத்துடன் இந்திய அரசு இந்தத் தீவினை பாதுகாப்பு பிரதேசமாக வரையறுத்திருக்கிறது. இதன் மூலம் இந்த மக்களின் தனித்துவம் இன்றுவரை காப்பாற்றப்பட்டு வருகிறது. அதே நேரம் கடந்த 200 ஆண்டுகளில் இத்தீவிற்கு வெளியாட்கள் சென்றிருந்தாலும், சந்திப்பு மோசமாகவே இருந்தது.

**சென்டினலிஸ் மக்கள் என்பவர்கள் யார்?**

201 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படியும், இந்த தீவில் எத்தனை பேர் வாழ முடியுமென்ற மானுடவியலாளர்களின் மதிப்பீடுகளின் அடிப்படையிலும், வடக்கு சென்டினல் தீவில் 80 முதல் 150 பேர் வரை இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அதே நேரம் இந்த எண்ணிக்கை அதிகபட்சமாக 500 முதல் குறைந்த பட்சமாக 15 வரை இருக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வங்காள விரிகுடாவில் உள்ள அந்தமான் தீவுகளில் உள்ள பிற பழங்குடியினருடன் சென்டினலீஸ் மக்கள் மானுடவியல் ரீதியாகத் தொடர்புடையவர்கள்.

என்றாலும் ஓங்கே மற்றும் ஜாரவா போன்ற பிற அந்தமான் பழங்குடி குழுக்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் நீண்ட காலமாகத் தனித்து வாழ்கின்றனர். இவர்களது மொழியை யாரும் புரிந்து கொள்ள முடியாது.

1967 இல் சென்டினலிஸ் கிராமத்திற்கு ஒரு முறை சென்றதன் அடிப்படையில், அவர்கள் சாய்ந்த கூரையுடன் கூடிய சிறிய குடிசைகளில் வாழ்கிறார்கள் என்பதை பண்டிட் தலைமையிலான குழு தெரிவித்தது. குடிசை முற்றத்தில் நெருப்புடன் இந்தக் குடிசைகள் ஒன்றுக்கொன்று எதிரெதிராக இருக்கும் வண்ணம் கட்டப்பட்டிருந்தது.

சென்டினலிஸ் மக்கள் தட்டையான மரத்துப்பை இயக்கி செலுத்தக்கூடிய கனமற்ற சிறிய படகுகளைப் பயன்படுத்துகிறார்கள். அந்த படகுகளிலிருந்து மீன்கள் மற்றும் நண்டுகளைப் பிடிக்கிறார்கள்.

பொதுவில் அவர்கள் வேட்டையாடுபவர்கள் எனலாம். அவர்களின் வாழ்க்கை முறை அந்தமானின் பிற மக்களைப் போன்றது என்றாலும், அவர்கள் தீவில் வளரும் பழங்கள் மற்றும் கிழங்குகள், கடற்பாசிகள் அல்லது ஆமைகளின் முட்டைகள் மற்றும் காட்டுப் பன்றிகள் அல்லது பறவைகள் போன்றவற்றை உண்டு வாழ்கின்றனர்.

அவர்கள் வில் மற்றும் அம்புகள், ஈட்டிகள் மற்றும் கத்திகளை எடுத்துச் செல்கிறார்கள். அந்தக் கருவிகள் மற்றும் ஆயுதங்களில் பலவற்றில் இரும்பினால் நுனிகள் போடப்பட்டிருக்கும். சென்டினலிஸ் தீவுகளின் கரையோரத்தில் ஒதுங்கும் பொருட்களைக் கண்டுபிடித்து தங்கள் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்துகிறார்கள்.

சென்டினலீஸ்கள் கூடைகளைப் பின்னுகின்றனர். மேலும் அவர்கள் இரும்பினால் செய்யப்பட்ட மர செதுக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். இது மனிதக் குல வரலாற்றில் கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவியாகும்.

இதுவரை, சென்டினீஸ் மொழி எதுவும் வெளியாட்களுக்குத் தெரியாது. வடக்கு சென்டினல் தீவுக்கு வெளியே உள்ள யாருக்கும் உண்மையில் சென்டினலிஸ்கள் தங்களுக்குள் எப்படி அழைத்துக் கொள்கிறார்கள் என்பதும் தெரியாது. அவர்களை எப்படி வாழ்த்துவது அல்லது உலகத்தைப் பற்றிய அவர்களின் பார்வை மற்றும் அவர்களின் பங்கு என்ன என்று யாருக்கும் தெரியாது.

1771 ஆம் ஆண்டு ஒரு இரவில், கிழக்கிந்தியக் கம்பெனியின் கப்பல் ஒன்று சென்டினல் தீவைக் கடந்தது. அப்போது கரையில் மின்னொளிகள் மின்னுவதைக் கண்டது. ஆனால் கப்பல் ஒரு ஹைட்ரோகிராஃபிக் ஆய்வுப் பணியிலிருந்ததால் அத்தீவில் நிற்கவில்லை. ஹைட்ரோகிராஃபிக் சர்வே என்பது கடல்வழி செலுத்தல், கடல் கட்டுமானம், அகழ்வாராய்ச்சி, கடல் எண்ணெய் ஆய்வு/கடற்கரை எண்ணெய் தோண்டுதல் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளைப் பற்றிய அறிவியல் ஆகும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# உயரப் பற!

அது ஒரு பறவைச் சந்தை. கிளி, புறா, மைனா, கௌதாரி. எனப் பலவும் விற்பனைக்கு வைக்கப் பட்டிருக்கும். ஒருநாள் அங்கே வித்தியாசமான இரு பறவைகளைப் பார்த்தார் ஒருவர். சிறகுகள் படபடக்க கூண்டில் அடைக்கப்பட்டிருந்த அவற்றைப் பார்த்ததுமே அவருக்குப் பிடித்து விட்டது. விற்பனைக்கு வைத்திருந்தவரிடம், “இதோட பேரு என்ன?” என்று கேட்டார்.

“தெரியலைங்க. காட்டில பார்த்தேன். அழகா இருந்துச்சு. பிடிச்சுக் கொண்டு வந்துட்டேன்.”

அந்த மனிதர் ஒரு நல்ல விலை கொடுத்து பறவைகளை வாங்கினார். வீட்டுக்கு வந்தார். தோட்டக்காரரை அழைத்து, “இதை நல்லா பார்த்துக்கணும்” என்று உத்தரவிட்டார்!

தோட்டக்காரர், அந்தப் பறவைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டார். நேரத்துக்கு உணவிட்டு, பறக்கப் பழக்குவார். கூண்டைத் திறந்ததுமே ஒரு பறவை ‘ஜிவ்’ வென்று விண்ணில் பறந்துவிடும். இன்னொன்று, கொஞ்சம் தூரம் பறந்து ஒரு மரக்கிளையில் உட்கார்ந்துவிடும். அதைத் தாண்டிப் பறக்காது. தினமும் இதே கதை.

எஜமானரும் இதை கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு மாதம் ஆனது. ஒரு பறவை வானில் பறப்பதும், மற்றொன்று அதே மரக்கிளையில் அமர்வதும் தொடர்ந்தது. இடையில் எஜமானர் வெளியூருக்குப் போயிருந்தார். தோட்டக்காரர், இரண்டாவது பறவையை என்னென்னவோ செய்து பார்த்தார். கெஞ்சி, கொஞ்சிப் பார்த்தார். பட்டினி போட்டார். மிரட்டிப் பார்த்தார். ம்ஹூம்... அந்தப் பறவை மரக்கிளையைத் தாண்டிப் போகவே இல்லை. ஊரிலிருந்து திரும்பினார் எஜமானர். காலையில் வழக்கம்போல ஜன்னலிலிருந்து பார்த்தார். தோட்டக்காரர் கூண்டைத் திறந்தார். இப்போது இரண்டாவது பறவையும் விண்ணில் பறந்தது. எஜமானருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. தோட்டக்காரரிடம் “அது எப்பிடி அந்தப் பறவையும் வானத்தில பறக்குது?”

“எனக்கு வேற வழி தெரியலை எஜமான். அந்த மரக்கிளையை வெட்டிட்டேன்.”

**சிரிப்பதற்கு ஒரு கதை!**

ஒரு வாத்து கடைக்குப் போனது. “மிட்டாய் இருக்கா?” என்றது.

“அதெல்லாம் நாங்க விக்கிறது இல்லை” என்றார் கடைக்காரர். மறு நாளும் அதே கடைக்குப் போனது வாத்து. “மிட்டாய் இருக்கா?” என்று கேட்டது.


“இல்லை.”

தினமும் வாத்து கடைக்குப் போவதும், கடைக்காரர் இல்லை என்பதும் தொடர்கதையானது.

ஒருகட்டத்தில் வெறுத்துப்போன கடைக்காரர், “இன்னொரு தடவை மிட்டாய் இருக்கான்னு கேட்டு வந்தேன்னா, சுத்தியலை எடுத்து மண்டையை உடைச்சுடுவேன்” என்றார். அடுத்த நாள் கடைக்கு வந்த வாத்து, “சுத்தியல் இருக்கா?”என்று கேட்டது.

“இல்லை.”

“சரி... மிட்டாய் இருக்கா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக ஊடகங்களில்
# பதிவுகள் பரிமாற்றத்தின் போது அவதானத்துடன் செயற்படுங்கள்
### கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை

**(கொழும்பு)**
**ஜனாதிபதித் தேர்தலின் போது சமூக ஊடகங் களில் பதிவுகளை பரிமாறிக்கொள்ளும் போது கவனமாக இருக்குமாறு இலங்கை கணனி அவசர செயற்பாட்டு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அதற்கமைய, இழிவுபடுத்தும் பதிவுகள் குறித்து மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என இலங்கை கணனி அவசர செயற்பாட்டு பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

சில போலி கணக்குகளின் ஊடாக வெளியிடப்படும் பதிவுகளை, தமது சமூக ஊடக கணக்குகள் ஊடாக பகிர்வதன் மூலம் தேர்தல் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகும் அபாயம் உள்ளதாக இலங்கை கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளையும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## விவசாயிகளின் முறைப்பாடு தொடர்பில்
# விசாரணைக்கு அழைப்பு விடுத்த மனித உரிமை ஆணைக்குழு

(முறிகண்டி)

தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டமை தொடர்பான விவசாயிகளின் முறைப்பாட்டிற்கமைய மனித உரிமை ஆணைக்குழு முக்கிய அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கிளிநொச்சி கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆகியோரை உள்ளடக்கி குறித்த கடிதம் கடந்த 02.09.2024 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

HRC/KIL/028/2024 இலக்கத்தில் முரசுமோட்டை கமக்காரர் அமைப்புப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைக்கு சமூகமளிக்குமாறு குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி இலக்க முரசுமோட்டை சமக்காரர் அமைப்பினைச் சேர்ந்த விவசாயிகள் சிலரினால் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 2024 ஆம் வருட சிறுபோக நெற்செய்கைக்காக பணங்கள் அறவீடு செய்யப்பட்டிருந்தும், குறிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டும் பயிர்ச்செய்கை நிலம் காட்டப்படாமல் பயிர் செய்ய இயலாத நிலையை ஏற்படுத்தியதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாக தெரிவித்து விவசாயிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைக்காக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-100)

# அநுரவை ஆதரித்து வவுனியாவில் பிரசாரம்

(வவுனியா)

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்கவை ஆதரித்து வவுனியா நகரில் தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் பிரசார நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டது. வவுனியா குடியிருப்பு பகு தியில் நேற்றுக் காலை ஆரம் பமாகிய பிரசார நடவடிக்கை நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப் பினர்கள், மக்கள் விடுதலை முன்னணியினர், தொழிற்சங்கங்கத்தினர் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்த னர். (நி-250)

# மணிவிழா

யா/ஆவரங்கால் மாகாஜன வித்தியாலய பதில் அதிபர் வல்லிபுரம் நவலோக நாதனின் சேவையை மதிப்பளித்து ஆசிரியர் கழகம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் மணிவிழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். (நி)

## பொருளாதார கொள்கையை வெளிப்படுத்துங்கள்
# அநுரவை சாடிய ரணில்

(கொழும்பு)

மக்களிடம் பொய் சொல்லாமல் தேசிய மக்கள் சக்தி தனது பொருளாதார கொள்கையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என சுயேட் சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி ஹினிதும பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

காலியை முக்கிய சுற்றுலா மையமாக மாற்ற எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி)

## வீதியில் கிடந்த ஏ.ரி.எம் அட்டை
# 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு

(ஹற்றன்)

ஹற்றனில் வீதியில் கிடந்த ஏ.ரி.எம் அட்டையை எடுத்து அதன் மூலம் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்த பாடசாலை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குறித்த மாணவன், கண்டியிலுள்ள கடைகளில் தொலைபேசி பாகங்கள், உடற்கட்டு ஊட்டச்சத்து பொருட்கள் மற்றும் சில ஜோடி காலணிகளை வாங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரான மாணவர் பொருட்களை கொள்வனவு செய்த நிறுவனம் ஒன்றில் வழங்கப்பட்ட அவரது உண்மையான பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் நேற்று மாணவனை கைது செய்துள்ளனர்.

காணாமல் போன ஏ.ரி.எம் அட்டையின் உரிமையாளரான பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் ஹற்றன் பொலிஸில் செய்த முறைப்பாட்டிற்கமைய, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கைதான மாணவன் கொள்வனவு செய்த பொருட்களை பேஸ்புக்கிலும் பதிவிட்டிருந்த தாக பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன் பிரதேசத்தில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றில் 13 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒரு வரே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய பாடசாலை மாணவன் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதன் பின்னர் 5 லட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடு விக்கப்பட் டுள்ளார். வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

# 30 லட்சம் முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 30 இலட்சம் முட்டைகள் இவ்வார இறுதியில் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபன ஆசிரிவலிசுந்தர தெரிவித்துள்ளார்.

முட்டை கொள்முதல் பணிகள் நிறைவடைந்துள்ளன. முட்டைகள் இறக்குமதிக்கான விண்ணப்பங்கள் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந் நிலையில், இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 40 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# விசேட வைத்தியர்களின் ஓய்வு வயது 63 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் வைத்திய அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயது 63 ஆகத் திருத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியச் சட்டத்தின் உரிய விதிகளை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மகிபால வெளியிட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கட்டாய ஓய்வு வயதை திருத்துமாறு (01-07-2024) அன்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளரின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் வைத்திய நிபுணர்கள், அனைத்து தர வைத்திய அதிகாரிகள், விசேட பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள், அனைத்து பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள், அனைத்து நிர்வாக தர வைத்திய அதிகாரிகள் மற்றும் அரச பதிவு வைத்திய அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (நி)

## தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை
# 25 000 ரூபாயாக உயர்த்துவேன்-சஜித்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை 25 000 ரூபாயாக உயர்த்துவேன் என எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

"அதற்கான சட்டங்களும் ஒழுங்குகளும் தயாரிக்கப்படும். அதேபோன்று ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் ஊழியர் சாசனமும் தயாரிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தனது கொள்கை அறிக்கையில் வலுவான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்க உறுதியெடுக்க வேண்டும்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அக்கிரமங்கள் தாண்டவம் ஆடும் இடமாக நம் வடமாகாணம்...

நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டு விட்டதெனும்போது, அங்கு சட்டம் ஒழுங்கு கண்டபாட்டில் சிதைவடையும் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

உலகில் வறுமைப்பட்ட நாடுகளில் எத்தகைய நிலைமைகள் தாண்டவமாடுகின்றனவோ அந்த நிலைமை நம் நாட்டிலும் தாண்டவம் ஆடத் தலைப்பட்டுள்ளது.

இருந்தும் இந்த நிலைமை நம் வட மாகாணத்தில் இன்னும் அதிகம் எனலாம்.

அதாவது, தற்போது வட மாகாணத்தின் நிலைமை எவ்வாறாக உள்ளதென்பதை எந்தவித பக்கசார்புமின்றி நடுநிலை நின்று சீர்தூக்கி ஆராய்ந்தால், உண்மை புலப்படும்.

ஆம், நம் வடபகுதியில் நாள்தோறும் நடக்கின்ற விபத்து மரணங்கள், கோஷ்டி மோதல்கள், வன்முறையில் ஈடுபடும் கும்பல்கள், கூலிக்குத் தாக்குதல் நடத்தும் குழுக்கள் என எங்கும் மிகப்பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதுதவிர களவு, கொள்ளை, அடாவடித்தனம் என்ற பட்டியல் முடிவிலியாக நீள்கிறது.

இவற்றோடு மட்டும் நிலைமை முடிந்து விட்டதா? என்றால் இல்லவே இல்லை.

காணி உரிமையாளர் இருக்க, அடாத்துப் பேர்வழிகள் காணிக்குள் இறங்கி உரிமை கோருகின்ற மிகப்பயங்கரமான சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன.

அதிலும் காணி உரிமையாளர்கள் அப்பாவிகள் என்றால், அவ்வளவுதான். நீதிமன்றத்தை நாடுவதற்குக் கூட அவர்கள் துணிவதில்லை.

இதைவிட அக்கிரமம், அரச உத்தியோகத்தர்களைப் பொதுமக்கள் அணுகமுடியாதிருப்பதாகும்.

ஆம், அரச சேவையைப் பெறும் பொருட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்குத் தொலைபேசியில் தொடர்பு எடுத்தால், பிரஸ்தாப உத்தியோகத்தர் தன்னைக் கடும் வேலைப்பளு உள்ளவர்போல காட்டிக் கொள்கிறார்.

கூட்டத்தில் இருக்கிறேன். நிர்வாகப் பணி செய்து கொண்டிருக்கிறேன். முக்கிய அலுவலாக உள்ளேன் எனக் கூறி, தங்களின் கடமையைத் தவிர்த்து விடுகின்றனர்.

இவ்வாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தங்களின் பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதன் காரணமாக, பொதுமக்கள் மௌனமாகிப் போகின்றனர்.

அதேநேரம் குறித்த அலுவலகங்களில் நடைபெறுகின்ற மீளாய்வுக்கூட்டங்களில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் எழுந்து நின்று அரசியல்வாதிகள் போல அடித்துக் கொளுத்துவர்.

அதேவேளை தங்கள் கடமையைச் செம்மையாகச் செய்கின்ற உத்தியோகத்தர்கள் அடக்கத்துடனும் அமைதியாகவும் இருப்பர்.

இவ்வாறாக, நம் வடமாகாணத்தின் நிலைமை உள்ளது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மேலிடம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறின் நிலைமை படுமோசமாகுவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதில் உறுதியாகவுள்ளேன்

## பிரித்தானியாவில் சிறீதரன் எம்.பி

எனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக சிறீதரன் அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த மாதம் 29ஆம் திகதி லண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சிறீதரன், அங்கு முதலாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் ஓரங்கமாக இரு தினங்களுக்கு முன்னர் பிரித்தானியவாழ் புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய சிறீதரன், "ஈழத்தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியல் பணியாற்றுவதற்காகவே நான் இணைந்து கொண்டேன். எனது அரசியல் பயணத்தையும், அது சார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் இறுதி வரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் தான் உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பொருளாதார வர்த்தகத்தை பலப்படுத்துவது மிக முக்கியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சுதந்திரப் பொருளாதார வர்த்தகத்தைப் பலப்படுத்துவது மிகவும் முக்கியமானதென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேயம்மிக்க வர்த்தகத்திற்கான பொருளாதாரத்தையும், சமூகச் சூழலையும் உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும்.

தற்பொழுது காணப்படுகின்ற வர்த்தகங்களை விரிவுபடுத்துவது மாத்திரமல்லாமல், அதிகளவில் அதனை ஊக்குவிப்பதன் ஊடாகவும், தனியார் தொழிற்துறையைப் பலப்படுத்துவதன் ஊடாகவும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

மனிதாபிமான முதலாளித்துவ சமூக ஜனநாயகப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தி, வர்த்தகர்களின் வருமானத்தையும் இலாபத்தையும் மேலும் அதிகரிக்கும் வகையிலான சூழலொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

# மாவையில் மோதல் இருவர் படுகாயம்

மாவிட்டபுரத்தில் நேற்று முன்தினம் இரவு மோதல் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். (ம-7)

# பிறவுண் வீதியில் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இதில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸார் இது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# வவுனியாவில் பஸ் விபத்து 13 பேர் காயம்

(வவுனியா)

வவுனியாப் பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மதவாச்சிப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றுடன் இருந்த கராஜில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. பஸ் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, பஸ்ஸில் 40க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பயணித்துள்ள நிலையில் அவர்களில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 06 பேர் மதவாச்சி வைத்தியசாலையிலும் 07 பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# யானை தாக்கியதில் சிப்பாய் உயிரிழப்பு

புஞ்சிஹலமில்லேவ பிரதேசத்தில் வயல் வெளிக்குள் புகுந்த யானைகளை விரட்ட முற்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

கஹடகஸ்திகிலிய, ரன்பத்வில பிரதேசத்தில் வசித்து வந்த ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாயான ஆர்.டபிள்யூ.எம்.ஜி.அபேரத்ன என்ற 52 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் இ.எஸ்.அபேசேகர உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியால் அழிவடையும் தென்னைப் பயிர்ச்செய்கை



(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வாழை, கமுகு தென்னை அழிவடைந்து வருவதாக தென்னைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்நிலை தொடருமாயின் தேங்காயைக் கூட வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்ட தென்னை அபிவிருத்திச் சபையினர், கமநல சேவை திணைக்களத்தினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-316)

# சுயதொழில் பயிற்சி முன்னெடுப்பு



(முறிகண்டி)

55 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் யுவதிகளிற்கான சுயதொழில் பயிற்சி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டதுடன் கண்டாவளைப் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

180 இற்கும் மேற்பட்ட யுவதிகள் பயிற்சியில் பங்கு கொண்டு பயன்பெற்றதுடன், அவர் களுக் கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. (நி-100)

# கஞ்சாவுடன் கைது

(அக்கராயன்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆணைவிழுந்தான் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவர் 11 கிராம் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய பொழுது நீதிவானின் உத்தரவுக்கமைவாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-316)

# மன்னாரில் ஆரம்பிக்கப்படவுள்ள அரச மருந்து கூட்டுத்தாபனம்

(மன்னார்)

இலங்கை அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் மன்னார் மாவட்டத்திற்கான கிளையை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கான முதல் கட்ட நடவடிக்கை நேற்று முன்தினம் தினம் வெள்ளிக் கிழமை ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்தகங்களில் மருந்துகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் கிளையை மன்னாரில் ஆரம்பிப்பதற்கான காணி நேற்று முன்தினம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகரப்பகுதியில் பொதுமக்கள் மிகக் குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக்கொள்ளும் வகையில் மாவட்ட செயலக வளாகத்தில் குறித்த கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த காணியை அளவிட்டு அடையாளப்படுத்தும் முகமாக ஔசல அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மன்னார் பிரதேச செயலாளர் பிரதீப், மன்னார் வைத்திய சாலை பணிப்பாளர் அசாத், மன்னார் நகரசபை செயலாளர் பிரிட்டோ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு காணி அடையாளப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி-285)

# தெற்கின் தேர்தல் வெற்றி தமிழர்களுக்கான கரிநாள்

## அருட்தந்தை மா. சக்திவேல்

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் வடகிழக்கில் நடத்திய எந்த ஒரு வாக்கு வேட்டை கூட்டத்திலும் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழர்களின் நிலங்கள் மற்றும் சிங்கள பௌத்த தொல்லியல் திணைக் களத்தின் சிங்கள பௌத்த மயமாக்கல், சிங்கள பௌத்த குடியேற்றங்கள், தனியார் காணிகளில் புத்தர் சிலைகளை வைத்தல், அடாத்தாக விகாரைகளை கட்டுதல் போன்றவற்றிற்கு வருத்தமோ தடுத்து நிறுத்துவதாகவோ கருத்து கூற மறுத்துள்ளமை தமது காலத்திலும் இது தொடரும் என்பதையே உணர்த்து கிறது.

இதுவும் ஒரு வகையில் யுத்தப் பிரகடனமே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய் வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரி வித்துள்ளார். அவ் அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

பேரினவாத ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிக் கதிரையை தமதாக்க தமிழர்களை வெறும் கறிவேப்பிலையாகவும் ரம்பையாகவும் பாவித்து விட்டு தூக்கி எறியவே முற்படுகின்றனர்.

சுயநல அரசியலுக்கு தம்மை இரையாக்கிக்கொண்ட தமிழ் தேசிய அரிதாரம் பூசிக் கொண்ட தமிழ் அரசியல் தரப்பினரும் தேர்தல் அரசியல் களத்தில் நின்று தமிழர்களை பலி கொடுக்கும் அரசியலை முன் நகர்த்துகின்றனர்.

சமாதானப்படையாக தமிழர் தாயகத்தில் காலடி வைத்த இந்திய இராணுவத்தையும் இந்தியாவின் முகத்தையும் இதற்கு அவர்கள் யார் என்பதையும் உலகிற்கு வெளிக்காட்டிய தியாகி திலீபனின் உயிர்த்தியாக மாதம் இதுவாகும்.

அவரின் உண்ணாவிரதப் போராட்டம் எமது அரசியலுக்கும் தேசியம் காக்கும் செயற்பாட்டுக்கும் உந்து சக்தியாக இருப்பதோடு எதிராளிகளில் முகத்திரையை கிழிக்க தேசமாக ஒன்று சேர்வோம்.

தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரிநாள் என்பதை வெளிப்படுத்துவோம்.

அதுவே எமக்கான தேர்தல் வெற்றியாக அமையட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-299)

# இராசிபலன்

08. 09. 2024
ஆவணி 23, ஞாயிற்றுக்கிழமை,
பஞ்சமி பி.ப- 4.59 மணிவரை

சுவாதி பி.ப- 1.49 மணிவரை
சுபநேரம்-9.04-10.34 மணிவரை
இராகுகாலம்-4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், விருந்தினர்கள் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.




தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெண்களால் பெருமை வந்துசேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




கடன் சுமை குறையநடவடிக்கை எடுப்பீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உடல் நலன் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




எடுத்த காரியங்களில் வெற்றி பெற கண்ணனை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உறவினர்களின் சந்திப்புண்டு.




வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், எதிர்கால நலன் கருதி திட்டிய திட்டங்கள் கைகூடும், ரோக பயமுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

உழைப்பவனுக்கு எந்த வேலையும் இழிவானதல்ல சோம்பல் தான் இழிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிய சிகிச்சை...

கொழும்புத்துறையைச் சேர்ந்த தயாரூபன் உதயகுமாரி (வயது- 50) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் அவரின் காலில் கண்ணாடித் துண்டு வெட்டியதாகவும் அதற்கு உரிய முறையில் சிகிச்சை பெறாமல் நல்லூர் ஆலய தரிசனத்தில் தினமும் ஈடுபட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கால் வீக்கம் ஏற்பட்டு காயம் பெருத்ததால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த மூன்றாம் திகதி இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையில் கிருமித் தொற்றால் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## 14 தமிழக...

செய்யப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

இதன்போது அவர்கள் பயணித்த 3 படகுகளும் கைபற்றப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

## நாவலர் வீதியில்...

இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தேர்தலில்...

செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு சட்ட விரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் மற்றும் பாதாள உலகக் கூட்டத்தினரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## வாக்குச்சீட்டை...

தபால் மூல வாக்களிப்பின்போது, புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் வாக்குச் சீட்டைப் புள்ளடியிட்ட பின்னர் கைத் தொலைபேசி மூலம் படம் எடுத்துள்ளார்.

இதனை உடனடியாகவே தேர்தல் கடமையில் இருந்த அதிகாரிகள் கண்டு கொண்டதால் மேற்படி ஆசிரியர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதையடுத்து குறித்த ஆசிரியர் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு என்பவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தேர்தல்கள் செயலகம், முல்லைத்தீவு பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட விசாரணையில், மேற்படி ஆசிரியர் வாக்குச்சீட்டைப் படம் எடுத்தமை கண்டுகொள்ளப்பட்டது. இதையடுத்து அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் குறித்த ஆசிரியரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## விஸ்தரிப்பதற்கு...

இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த நிதி வழங்கலுக் கமைய குறித்த துறைமுகம் விரைவில் கப்பல் பயணங்களுக்கு தயாராகிவிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கெனவே, வடக்கில் விமான நிலையம், தீவுகளில் காற்றாலை மின்சாரம் மற்றும் தொடருந்து போக்குவரத்துத் துறைகளில் இந்திய நிதியுதவிகளையும் முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காங்கேசன்...

இணைய வழி www.sailindsri.com மற்றும் Google Playstore & AppStire செயலி (Sail indsri) மூலமாகவும் பயண முகவர் மூலமாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம-7)

# ஜனாதிபதித் தேர்தலின் பின் உள்ளூராட்சித் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், இருப்பினும் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுமாயின் அது குறித்து சிந்திக்கவேண்டியிருக்கும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரும், சட்டத்தரணியுமான அமீர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.

அத்தகைய சூழ்நிலையில் முதலில் பாராளுமன்றத் தேர்தலையும், தாமதமின்றி அடுத்ததாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் நடாத்துவது குறித்து ஆணைக்குழு தற்போது ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.(ம-7)

## மாகாணங்...

யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நேற்று இடம்பெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப்படும் என்பதுடன் மாகாண அபிவிருத்தி விசேட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்.

விவசாயத் துறையைப் பலப்படுத்தி வரும் நிலையில், வடக்கில் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வடக்கில் காங்கேசன்துறை, பூநகரி, மாங் குளத்தில் விசேட வர்த்தக வலயம் ஆரம்பிக்க விருப்பதுடன் வடக்கில் சுற்றுலாத் துறை ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன்வடக்கில் டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்க இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணம் மக்களுக்கும் உறுமயகாணி உறுதி பெற்றுக் கொடுக்கப்படும். அடுத்த வருடம் மேலும் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம். உற்பத்தி அதிகரிக்கும்போது அனைவரிடமும் வரி அறவிடப்படும். அத்தோடு தற்போது வரி செலுத்துவோரின் வரிச்சுமை குறையும்.

வட பகுதி மக்கள் பிரதிநிதிகள், அமைப்பாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் பங்கேற்ற இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் சிறிபால டி சில்வா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (ம-7)

## இலங்கைத்...

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலுள்ள அவரது இல்லத்தில் இச்சந்திப்பு நடை பெற்றது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு இலங்கைத்தமிழரசுக் கட்சி ஆதரவளித்துள்ள நிலையில் இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 5589
T 3 9 3 5 0 8
அத சம்பத
T 3 5 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 164
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1619
P 18 19 23 67 P
Double Chance 54171

மெகா பவர்
திகதி 07/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1937
C 11 13 22 71 72
Double Chance 36686

லக்கி 7 VIP
திகதி 2024.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 415
V 8 3 0 6 9 6 V
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3831
சீட்டிழுப்பு திகதி 07.09.2024
H 07 13 28 53
H 75816
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 0898
கன்னி 27 31 50 61 கன்னி
26628 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல சவிபன
07.09.2024 வெற்றி வாரம் 297 வர்ணம் நீலம்
D 5 9 6 1 5 9
55643
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,586,104.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2563 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 07.09.2024 தினம் சனிக்கிழமை
05 10 19 48 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,428,894.40
DLB

சனிதா
திகதி 2024.09.07 வெற்றி வாரம் 4724
05 09 10 46 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,225,502.80
ரூ. 100,000/- 48115
DLB

சீட்டிழுப்பு வாரம் 4275 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.07 தினம் சனிக்கிழமை
26 36 44 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,661,422.80
175241
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 32 12 16 19 67
1739 சிவப்பு 07.09.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 543,600,062.60
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2389
சீட்டிழுப்பு திகதி : 2024.09.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,079,868.00
அட கோடிபதி ADA KOTIPATHI
14 25 40 73 W
ரூ.100,000/- 509123
DLB


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## பணியாளர் வெற்றிடம்

- கணனி அறிவுடன்கூடிய காட்சியறை விற்பனையாளர்கள் - பெண்கள் (அலங்கார மின் விளக்குகள், மின்சார உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள்)
  - ✓ EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்
  - ✓ நிரந்தர தொழில்.
- ❖ சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

(1869)

ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.

021-2222564/021-2227430

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

ENGLISH *30% Special offer for all the courses*

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(1819)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு.

" SHARP FROST FREE FRIDGE "

தொடர்புகளுக்கு:

021 222 5742

(1854)

## அழகு நிலைய உதவியாளர் தேவை

அழகு நிலைய அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :- 077 885 4905

(1883)

## பணியாள் தேவை

யாழ் நகரில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர். விற்பனையாளர் தேவை. வயது 18 - 30 வரை. யாழ் நகரில் இருந்து 6Km உட்பட்டவர்கள். O/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்

075 881 0010
076 185 2241


(1850)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= | Max5kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 265/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 376/= | |
| 1 Kg றவை | - 282/= | |
| 1 Kg சம்பா | - 224/= | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 870/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg சோயா | - 440/= | |
| 1 Kg மல்லி | - 380/= | |
| 1 Kg லங்கா கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |

400g Anchor

1000/=




~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(322)

Happy Supermarket 0777 8080 30

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684

(304)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1143)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(322)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-1143)

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322

# மணிவிழா வாழ்த்துக்கள்



ஆசிரியர் சேவையில் முப்பத்திநான்கு வருடங்களும் எமது பாடசாலையில் உப அதிபராக 07.09.2024 வரை சேவையாற்றி ஓய்வு பெற்று 2024.09.08 ஆம் திகதி மணிவிழாவைக் கொண்டாடும்

## திரு. பரமலிங்கம் அருமைநாதன்

S.L.T.S -I

அவர்களின் சேவையைப் பாராட்டி மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதிலும் பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

(1879)

**சேவை விபரம்**

- 1990.01.26 - 1992.07.20 - கே/தெஹி/கணேபல்ல தமிழ் வித்தியாலயம் (எட்டியாந்தோட்டை)
- 1992.07.21 - 1999.05.02 - கே/தெஹி/புனிதமரியாள் த.ம.வி (எட்டியாந்தோட்டை)
- 1999.05.03 - 1999.12.31 - யா/இணுவில் மத்திய கல்லூரி
- 2000.01.01 - 2003.12.31 - யா/ உடுவில் அ.மி.த.க பாடசாலை
- 2004.01.01 - 2009.09.20 - யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை
- 2009.09.21 - 2009.12.31 - யா/புதுமடம் R.C (பதில் அதிபர்)
- 2010.01.01 - 2013.12.31 - யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்
- 2014.01.01 - 2017.07.21 - யா/ அளவெட்டி வடக்கு A.M.T.M.S (பதில் அதிபர்)
- 2017.07.22 - 2021.08.02 - யா/ இணுவில் மத்திய கல்லூரி (உதவி அதிபர்)
- 2021.08.03 - 2024.08.07 - யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் (உப அதிபர்)

Best Wishes!

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.